Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JUNE 18, 2022

சனிக்கிழமை ஜூன் 18, 2022 | ஒளி: 08 கதிர்: 026 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

திங்கள் முதல் மீண்டும் ஒன்லைன் கற்றல் நடவடிக்கைகள்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடியை கவனத்தில் கொண்டு, அடுத்த திங்கள் (20) முதல் இரண்டுவாரங்களுக்கு ஒன்லைன் முறைமையை மீண்டும் அமல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டை இரண்டு வாரங்களுக்கு முழுமையாக முடக்குவது இன்றேல், ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்து, அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரால் வியாழக்கிழமை (16) இரவு கலந்தாலோசிக்கப்பட்டது. எனினும், அது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு எவையும் வெளியாகவில்லை. இந்நிலையில், அரச அலுவலக பணிகள், பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை இரண்டு வாரங்களுக்கு ஒன்லைன் மூலம் மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கான சுற்றறிக்கை நேற்று (17) மாலை வெளியானது.

நெருக்கடிக்கு இப்போது தீர்வு கிடைக்காது

கச்சதீவு கைமாறியதால்

எமக்கே அதிக பாதிப்பு

இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட கச்சதீவு தொடர்பான ஒப்பந்தம் காரணமாக இலங்கையின் வடக்கு கிழக்கு பிதேசங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்களே பாரிய இழப்புகளை சந்தித்துள்ளனர் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இருந்தபோதிலும் கச்சதீவை இந்தியாவிடம் கையளிக்கும் எந்தவிதமான நோக்கமும் இலங்கைக்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இந்த ஆண்டை சமாளிக்க 5 பில்லியன் டொலரை எதிர்பார்க்கிறோம்

சர்வதேச நாணய நிதியத்தை முன்னரே நாடியிருந்தால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை சமாளிக்கக்கூடியதாக இருந்திருக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். உரிய நேரத்தில் தொழில்நுட்ப ஆலோசனைகளை கருத்தில் கொண்டு வெளி உதவிகளை பெற்றிருக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

ஆசிரியர்களை

அருகிலுள்ள பாடசாலைகளில் பணிக்கு அமர்த்த தீர்மானம்

போக்குவரத்து சிக்கல்களை தவிர்க்கும் அடிப்படையில் ஆசிரியர்களை தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளில் பணிக்கு அமர்த்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மாகாண கல்வி பணிப்பாளர்கள் மற்றும் வலய கல்வி பணிப்பாளர்களுக்கு

தொடர்ச்சி P2

உணவு நெருக்கடி

4- 5 மில்லியன் இலங்கையர்களை நேரடியாக பாதிக்கும்

உணவு நெருக்கடியானது எதிர்காலத்தில் 4 மில்லியன் முதல் 5 மில்லியன் இலங்கையர்களை நேரடியாகப் பாதிக்கக் கூடும் என்றாலும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான குழுவின் கூட்டத்தில் நேற்று (17) காலை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

முதலீட்டை ஊக்குவிப்பதற்காக

புதிய உத்திகளை கையாள வேண்டும்

அந்நியச் செலாவணியை விரைவாக ஈட்டுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கைத்தொழில் துறையில் வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். நீண்டகாலமாக இருக்கின்ற விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் முதலீட்டிற்கு கடுமையான தடையாக உள்ளன. முதலீட்டை ஊக்குவிப்பதற்காக புதிய உத்திகளைக் கையாண்டு கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு பாரியளவு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

1,500 ஏக்கர் அரசு காணிகளில்

விவசாயம் மேற்கொள்ள இராணுவம் தீர்மானம்

நாடு முழுவதும் உள்ள தரிசு அல்லது கைவிடப்பட்ட அரச காணிகள் உள்ளடங்களான 1,500 ஏக்கரில் விவசாயம் மேற்கொண்டு, இலங்கை உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டத்தை மேம்படுத்தும் முகமாக இலங்கை இராணுவம் தமது பசுமை விவசாய வழிகாட்டல் குழுவை நிறுவியுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

பொருளாதார நெருக்கடியை தீர்க்க

ஆதரவை எதிர்பார்க்கிறோம்

தென் கொரிய, பாகிஸ்தான் தூதுவரிடத்தில் ஜனாதிபதி வேண்டுகோள்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண இலங்கைக்கு தமது அரசாங்கம் முழுமையானஆதரவை வழங்கும் என இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் ஜியோங் வுன்ஜின், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் தூதுவருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, தற்போதைய நிலைமையில் இருந்து மீள, தென்கொரிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். இலங்கை இளைஞர்களுக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்புகளை அதிகரிக்குமாறும், கைத்தொழில் துறையில் முதலீடு செய்வதற்கு தொழில்முயற்சியாளர்களை அழைக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

அரசியல் கைதிகளுக்கு

நீதி நிலைநாட்டப்படல் வேண்டும்

அரசியல் கைதிகளுக்கு அரசியல் ரீதியான நீதி நிலைநாட்டப்படல் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இவர்கள் அரசியல் கைதிகளாக அங்கிகரிக்கப்பட்டு அரசியல் தீர்மானத்தின் மூலம் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும். இவர்களின் சுதந்திரமான நடமாட்ட த்திற்கு இடமளிக்கப்படல் வேண்டும் என அருட்தந்தை ம.

தொடர்ச்சி P2

அரசாங்கம் மீதான

நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டது

இந்த அரசாங்கம் நாளுக்கு நாள் நாட்டை கடினமான பாதைக்கு கொண்டு செல்லுகின்றது. தற்போதைய அரசாங்கம் மீது சர்வதேச தரப்பினருக்கு நம்பிக்கை இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சார்ஜன்ட் மரணம்

தங்காலை பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த சார்ஜன்ட் தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று (17) நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், 45 வயதான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்துள்ள பொலிஸ் தலைமையகம், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

AMNESTY INTERNATIONAL

ஐ.எம்.எப் – இலங்கை பேச்சுவார்த்தை

மனித உரிமைகளை மையப்படுத்தி அமைய வேண்டும்

சர்வதேச மன்னிப்புச் சபை ஐ.எம்.எப்புக்கு வலியுறுத்து

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளின் சீர்திருத்த நகர்வுகளின் போது, சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை, மனித உரிமைகளை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

மக்களின் எதிர்ப்பை குறைத்து மதிப்பிடாதீர்கள்

மக்களை ஏமாற்றும் பொய்யான காரணிகளை கூறி, இனியும் பொது மக்களை கோபப்படுத்த வேண்டாம். மாற்றம் ஒன்று வேண்டுமென நாடு முழுவதிலும் இருந்து மக்கள் குரல் எழுந்துள்ளன. அந்தக் குரல் எதிர்காலத்தில் இன்னும் பலமாக ஒலிக்கும். அந்த எதிர்ப்பை குறைத்து மதிப்பிடாதீர்கள் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார். நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் வாக்குறுதியளிக்கப்பட்ட 19வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதை மேலும் காலதாமதமாக்கி மக்களை ஏமாற்ற வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

தஞ்சமடைதல் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலை அதிகரிப்பு, வாழ்க்கையை கொண்டுநடத்த முடியாத சூழ்நிலை காரணமாக, மேலும் 7 பேர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் உள்ளிட்ட 7 பேர் தனுஷ்கோடி முதலாவது தீடையை நேற்று (17) சென்றடைந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு

நிதி அமைச்சும் மத்திய வங்கியும் இணைந்த திட்டம்

வழங்குனர்களுடன் நீண்ட கால ஒப்பந்தங்களில் கவனம் செலுத்த நடவடிக்கை

தற்போது கிடைத்துள்ள மற்றும் அடுத்த சில நாள்களுக்குள் பெறப்படவுள்ள எரிபொருள் கையிருப்புகளை நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முறையாக விநியோகிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

திஸாநாயக்க இராஜினாமா

நுகர்வோர் அதிகார சபையின் தலைவரான மேஜர் ஜெனரல் (ஓய்வு) டி.எம்.எஸ். திஸாநாயக்க, தன்னுடைய இராஜினாமா கடிதத்தை நேற்று (17) கையளித்தார்.

இறக்குமதி செய்யப்பட வேண்டிய

அரிசியின் தேவை 800,000 மெட்ரிக் தொன்

நாட்டில் நிலவும் உணவுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அனைத்து அமைச்சுகளையும் ஒன்றிணைத்து உணவுப் பாதுகாப்புக்கான அமைச்சரவை உபகுழுவொன்றை அமைக்க வேண்டுமென அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பொறுப்பான அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து, விரைவான முடிவுகளை எடுப்பதற்கும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

நெருக்கடிக்கு இப்போது தீர்வு கிடைக்காது

ஆனால் அதனை தவறவிட்டுள்ளோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச தரப்பிடம் இருந்து 5 பில்லியன் அமெரிக்க டொலரை எதிர்பார்த்துள்ளோம். இந்த ஆண்டுக்காக மாத்திரம் 5 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது எனக் கூறியுள்ள அவர், குறிப்பிட்ட சில காலத்திற்கு எம்மால் சர்வதேச கடன்களை மீள செலுத்த முடியாத நிலையொன்று காணப்படுகின்றது. வெறுமனே கடன்களை வாங்கி சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையொன்றில் நாம் சிக்கிக்கொண்டுள்ளோம் என்றார்.

இப்போது இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வு காணமுடியாது. மேலும் சில ஆண்டுகளுக்கு மிக்க கடினமான நிலைமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும். இதன்போது சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் முழுமையான ஒத்துழைப்புக்களை எதிர்பார்த்து நிற்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

மெக்கே அதிக பாதிப்பு

மன்னார் மாவட்டத்தின் கடற்றொழில், நீர்வேளாண்மை செயற்பாடுகள் மற்றும் அவற்றினை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று (17) மன்னாருக்கான விஜயம் ஒன்றை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டார். இதன்போது, மாவட்ட கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மேற்குறிப்பிட்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது வளங்களை அழிக்கும் தொழில்முறையை கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் நான் உறுதியாகவே இருக்கின்றேன். கச்சதீவு விவகாரம் அரசியல் நோக்கங்களுக்காக சிலரினால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. எனினும், அவ்வாறான எந்தவகையான எதிர்பார்ப்புகளும் இந்திய மத்திய அரசாங்கத்திடம் இருப்பதாக தெரியவில்லை. உண்மையிலேயே, குறித்த ஒப்பந்தம் காரணமாக மீன்வளம் நிறைந்த கணிசமானளவு கடல் பரப்பில் மீன்பிடியில் இலங்கை கடற்றொழிலாளர்கள் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக பெரியளவில் யாரும் கதைப்பதில்லை. இந்த உண்மையை வெளிப்படுத்தும் வகையில் இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவருக்கு கடிதம் அனுப்புவதற்கு திட்டமிட்டு வருகின்றேன் என்று தெரிவித்தார்.

ஆதரவை எதிர்பார்க்கிறோம்

நேற்று முன்தினம் (16) பிற்பகல் கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் தென்கொரிய தூதுவர் ஜியோங் வுன்ஜினுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் நேற்று (17) பிற்பகல் ஜனாதிபதியை சந்தித்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உமர் பாரூக் புர்கியிடமும் ஜனாதிபதி உதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண இலங்கைக்கு தமது அரசாங்கமும்பூரண ஆதரவை வழங்கும் என பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

அருகிலுள்ள பாடசாலைகளில் பணிக்கு அமர்த்த தீர்மானம்

இதற்கான அதிகாரத்தை வழங்கும் வகையில், கல்வி அமைச்சின் செயலாளரினால் சுற்று நிரூபமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களை தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளில் சேவைக்கு அமர்த்தும் போது, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுமாறும் கல்வி அமைச்சு, அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது. தேசிய பாடசாலை, சாதாரண பாடசாலை என்ற வேறுபாடின்றி ஆசிரியர்களை இவ்வாறு சேவைக்கு அமர்த்த முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலையொன்றில் மேலதிக ஆசிரியர்கள் இருப்பார்களாயின் அவர்களை தங்களது வீட்டிற்கு அருகிலுள்ள பாடசாலையில் கடமைக்கு அமர்த்த முடியும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

4 மில்லியன்...

நாட்டில் உள்ள 336 பிரதேச செயலகங்களின் இலக்குகளை விருத்தி செய்வதற்கும் அதனை அடைவதற்கும் தலைமைத்துவத்தை வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் எஞ்சியவை அமைச்சுக்கள் மற்றும் தனியார் துறைகளின் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்தார். உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ். இதற்காக பிரதேச செயலகங்களில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள முன்மொழியப்பட்டது.

பாரிய உணவு பஞ்சமொன்று ஏற்படும் அபாயம் உள்ள நிலையில் இதன் தாக்கம் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள்எதிர்கொள்ள நேரிடும்.எனவே அவர்கள் மீது அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

புதிய உத்திகளைக்...

ஏற்றுமதி கைத்தொழில் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியை நேரடியாக மூலப்பொருட்கள் இறக்குமதிக்கு பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

கைத்தொழிற்துறைக்கு அனுமதி வழங்கும் அனைத்து நிறுவனங்களும் ஒரே மேசையில் ஒன்றிணைந்து தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்காவிட்டால் முதலீட்டாளர்களை வெற்றிகொள்ள முடியாது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். நாட்டின் பொருளாதாரம் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அதனை உற்பத்திப் பொருளாதாரமாக மாற்றுவது காலத்தின் தேவை எனவும் குறிப்பிட்டார்.

விவசாயம் மேற்கொள்ள இராணுவம் தீர்மானம்

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த ஆண்டு ஜூலை மாத தொடக்கத்தில் இவ் அவசர செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே தலைமையில், பிரதி பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் சன்னவீரசூரிய இத்திட்டத்தின் முகாமைத்துவத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் உணவு வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, கைவிடப்பட்ட நிலங்களில் உடனடி பயிர்ச்செய்கை மூலம் உணவு உற்பத்தி செயல்முறையைப் பெருக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என இராணுவத் தளபதி இதன்போது தெரிவித்தார்.

முதற்கட்டமாக, நாடளாவிய ரீதியில் உள்ள இராணுவத்தினர் விவசாய நிபுணர்கள், விவசாய அதிகாரிகள் மற்றும் இராணுவ விவசாய மற்றும்

> **கைவிடப்பட்ட நிலங்களில் உடனடி பயிர்ச்செய்கை மூலம் உணவு உற்பத்தி செயல்முறையைப் பெருக்குவது குறித்து, இராணுவம் கவனம் செலுத்த உள்ளது**

கால்நடை பணியகத்தின் அனுபவம்வாய்ந்த அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தெரிவு செய்யப்பட்ட விதை வகைகளை பயிரிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், தெரிவு செய்யப்பட்ட காணிகளில் பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்கும் முன்னர், அந்தந்த ஆளுநர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நெருக்கமான ஆலோசனையுடன் பிராந்திய மட்டத்தில் அரச காணிகளை அடையாளம் காணப்படவுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

தஞ்சமடைதல் அதிகரிப்பு

பொருளாதார நெருக்கடியை அடுத்து, இலங்கையிலிருந்து இதுவரை 83 பேர், கடல்வழியாக தமிழகத்தை சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

நிதி அமைச்சும் மத்திய வங்கியும் இணைந்த திட்டம்

நிதி அமைச்சும் மத்திய வங்கியும் அரச மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து போதியளவு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கடன் கடிதங்களை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பெற்றோல், டீசல் மற்றும் எரிவாயு விநியோகம் மற்றும் இறக்குமதி தொடர்பில் நேற்று (17) முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வழங்குனர்களுடனான நீண்ட கால எரிபொருள் விநியோக ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான சாத்தியம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், எரிபொருள் விநியோகத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி, தனியார் மற்றும் சுற்றுலா பேரூந்துகள் மற்றும் பாடசாலை வாகனங்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையின் கீழ் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலம் தொடர்ந்தும் எரிபொருளை விநியோகிக்கவும், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமல்படுத்தவும் பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடப்பட்டது.

நீதி நிலைநாட்டப்படல் வேண்டும்

சக்திவேல் தெரிவித்துள்ளார் அன்மையில் அமைச்சர் ஜி. எல். பீரிஸ், மனித உரிமை ஆணையத்துக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தில் போதுமான திருத்தங்கள் செய்துள்ளோம். 22 அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தோம் என அறிக்கை கொடுத்தார். 26 வருடங்கள் சிறையில் வாடும் பார்த்திபனுக்கு என்ன கூற உள்ளார்? அவர் விடுதலை செய்ததாக கூறும் 22 பேரும் எப்போது கைதுசெய்யப்பட்டனர்? என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டனர்? அவர்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த காலம் எவ்வளவு? எனும் விவரங்களை வெளியிடுவாரா? இவர் விடுதலை என்பதும் சட்டத்திருத்தம் என்பதும் சர்வதேசத்தை ஏமாற்றும் அரசியல் நாடகமே. அத்தோடு பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் பலர் எந்த ஒரு குற்றச்சாட்டுகளும் இன்றி பத்து வருடங்களில் கடந்த நிலையில் குற்ற மற்றவர்களாக நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள். இவர்கள் தொடர்பில் இவரும், இவர் சார்ந்த அரசும் சர்வதேசத்துக்கு விளக்கமளிப்பார்களா?

தற்போது நாடு முகம் கொடுத்து கொண்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உணவு கட்டுப்பாட்டையும் எதிர்நோக்கி இருக்கையில் அரசியல் கைதிகளையும் மனிதர்களாக கருதி அவர்களை குடும்பங்களோடு சேர்ந்து குடும்ப உறவுகளோடு வாழவைத்து நாட்டுக்கு பயனுள்ளவர்களாக மாற்றுவது அரசின் கடமையாகும். ஆதலால் குடும்பங்களோடு சேர்ந்து வாழ்வதற்கான ஏற்பாடுளையும் உடனடியாக செய்ய வேண்டும் எனக் தெரிவித்தார்.

நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டது

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (17) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஒட்டுமொத்த நாடும் சகல விதத்திலும் நெருக்கடிகளை சந்தித்துள்ள தற்போதைய நிலைமையில் நாளை வேறோர் அரசாங்கம் உருவானாலும் கூட, பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை. இந்த நெருக்கடி நிலையில் இருந்து மீள வேண்டும் என்றால் நாம் முன்வைத்த யோசனைக்கு அமைய அரசாங்கத்தை உருவாக்கினால் மிக்க குறுகிய காலத்தில் நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காணமுடியும். சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றினை உருவாக்கி, அமைச்சரவைக்கு 15 பேரை தெரிவுசெய்து, அதேபோல் பொதுத் தேர்தல் ஒன்றுக்கான கால எல்லையையும் தீர்மானித்து செயற்பட வேண்டும். இதுவே சர்வதேச தரப்பின் யோசனையாகவும் உள்ளது. அவ்வாறான நிலையில் நாட்டிற்கு உதவிகளை வழங்க

> **நாளுக்கு நாள் நாட்டை கடினமான பாதைக்கு கொண்டு செல்லும் அரசாங்கமே உள்ளது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தொடர்புகள் இல்லை என்பது தெளிவாக வெளிப்படுகின்றது**

தயார் என சர்வதேச தப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் மீதான மக்களிடத்தில் நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. அதேபோல் சர்வதேச மட்டத்தில் நாடுகளுக்கும், அமைப்புகளுக்கும் இந்த அரசாங்கம் மீது நம்பிக்கையில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசாங்கம் செயற்பட்ட விதம் குறித்தும் சர்வதேச மட்டத்தில் நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. இப்போதும் நாளுக்கு நாள் நாட்டை கடினமான பாதைக்கு கொண்டு செல்லும் அரசாங்கமே உள்ளது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தொடர்புகள் இல்லை என்பது தெளிவாக வெளிப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

மனித உரிமைகளை மையப்படுத்தி அமைய வேண்டும்

அண்மைய மாதங்களாக இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்கும் விதமாக சர்வதேச நாணய நிதியம் கூடிய கரிசனை செலுத்தி வருகின்றது. கடந்த காலங்களில் பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்ற நாடுகளில் மனித உரிமைகள் பாதுகாப்பு குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அதன் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகவும், இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளின் சீர்திருத்த நகர்வுகளின் போது சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை மனித உரிமைகளை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

பாதிக்கப்படக்கூடிய மற்றும் வறுமையில் உள்ள மக்களின் பாதுகாப்புகள், அனைத்து மக்களும் போதுமான வாழ்க்கைத் தரத்தை அணுகவும் அனுபவிக்கவும் முறையான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளாக அமையவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்களின் எதிர்ப்பை குறைத்து மதிப்பிடாதீர்கள்

ஜனநாயகத்தை பாதுகாப்பதாகவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் எமது அரச தலைவர் சர்வதேச சமூகத்திடம் எவ்வாறு வாக்குறுதியளித்தார் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 19ஆவது திருத்தச் சட்டத்தை மீள அமல்படுத்துவதற்கும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கும் இலங்கைப் பிரஜைகளுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்குள் புதிய அரசியலமைப்பை கொண்டு வரவும், இரட்டைக் குடியுரிமை நிபந்தனையை ஓராண்டுக்குள் நீக்குவதாகவும் தெரிவித்தார். இவை எதுவும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. புதிய அரசியலமைப்பு வெறும் வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது என்றார்.

இவ்வாறான அறிக்கைகள் உலகிற்கு பகிரங்கமாக மீறப்படும் போது அத்தகைய நாட்டின் அரச தலைவரின் வாக்குறுதிகளை உலகம் நம்புமா? குடிமகன் நம்புகிறாரா? முதலீட்டாளர் நம்புகிறாரா? அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் தற்போது மீறப்படுகின்றன என்றார்.

அரிசியின் தேவை...

எடுப்பதற்கும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கும்,

காலநிலை மாற்றம், ரஷ்ய - உக்ரைன் போர், உலக கோதுமை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, சோள உற்பத்தி, உர உற்பத்தியிலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, எண்ணெய் விலை உயர்வு போன்றவற்றால் உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளதுடன், அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்ட உர நெருக்கடி மற்றும் அந்நிய செலாவணி கையிருப்பு பற்றாக்குறை மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு தொடர்பான கொள்கை சிக்கல்கள் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்துள்ளது. இலங்கை சுங்க மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தரவுகளின்படி, சம்பா அரிசி, நாட்டு அரிசி, சீனி, சிகப்பு பருப்பு, கோதுமை மா, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, டின் மீன், பால்மா, செத்தல் மிளகாய் கொண்டைக்கடலை, கோழி இறைச்சி, மீன் மற்றும் முட்டை உள்ளிட் 16 வகையான உணவுகள் வர்த்தக அமைச்சினால் அத்தியாவசிய உணவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் பெரும்போக மற்றும் சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசியஉணவுப் பொருட்களின் அளவு மற்றும் நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய தேவையான அளவு இல்லாமையினால் எதிர்காலத்தின் தேவைக்காக இறக்குமதி செய்யப்பட வேண்டிய அரிசியின் தேவை 800,000 மெட்றிக்தொன் அவசியம் எனவும் தெரிவித்துள்ளனர்.

‘பட்ட காலிலேதான் படும்’

ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com

சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு , தட்டிப்பாடு என்பன நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

ஒரு நோயாளியை இறைவனைத் தவிர வேறு யாராலும் காப்பாற்ற முடியாது என்று வைத்தியர்கள் கைவிரிப்பது போலவே இன்று இலங்கையின் நிலைமையும் காணப்படுகிறது.

இனி இந்த அரசாங்கத்தை நம்பி பிரயோசனமில்லை. இறைவன்தான் நமக்கு நல்ல வழியை காட்ட வேண்டும் என்றுதான் மக்கள் தங்களது மனதை ஆறுதல்படுத்துக்கொள்கிறார்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக பல முதலாளிமார்கள் தொழிலாளர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில முதலாளிமார்கள் தமது வர்த்தக நடவடிக்கைளை கைவிட்டுவிட்டு வெளிநாட்டுக்கு செல்லும் நிலையும் காணப்படுகிறது.

இந்த நிலையில் , சமயல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் பொருட்களில் விலை அதிகரிப்பு காரணமாக பல உணவகங்கள் மூடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் தொடர்ச்சியாக எரிபொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், தற்போது சமையல் எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு காணப்படுகிறது.

இந்த நிலையில் அரச அலுவலகங்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் என்பனவற்றை 2 வாரங்களுக்கு இணைய வழி மூலம் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் நேற்றிலிருந்து (17) தீர்மானித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றுக்காக பற்றாக்குறையில் பஞ்சமில்லாமல் காணப்படுகிறது.

சமையல் எரிவாயுக்களை விற்பனை செய்து வருகின்ற விற்பனை நிலையங்களுக்கு முன்பாக நூற்றுக்கணக்கான முடிவடைந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மாதக்கணக்கில் அடிக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோல எரிபொருள் கொள்வனவுக்காக மக்கள் வரிசையில் காத்து நிற்கின்றனர். இந்த நிலையில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான உணவங்கள் மூடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

புத்தளம், பாலாவி , மதுரங்குளி மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பல உணவகங்களும், வீதியோர சிற்றுண்டிச் சாலைகளும் பகல் மற்றும் இரவு நேரங்களில் இவ்வாறு தொடர்ச்சியாக இழுத்து மூடப்பட்டுள்ளன.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக முகம் கொடுக்க முடியாத காரணத்தினால் பல உணவகங்களின் உரிமையாளர்கள் தமது உணவகங்களில் உள்ள சகல பொருட்களையும் விற்பனை செய்து விட்டு வெளிநாடு செல்லும் நிலையும் இங்கு காணப்படுகிறது.

சமையல் எரிவாயு இன்றி உசவகங்களை ஒருபோதும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக உணவகங்களின் உரிமையாளர்கள் கூறுகின்னர்.

மாத்திரமன்றி, மரக்கறிகளின் விலை அதிகரிப்பு, அரிசி, கோதுமை மா உள்ளிட்ட உணவுப் பண்டங்களை தயார் செய்கின்ற பொருட்களின் விலைகளும் வானத்தை தொடும் அளவுக்கு அதிகரித்துக் காணப்படுவதால் அவற்றை கொள்வனவு செய்து எவ்வாறு மக்களுக்கு விற்பனை செய்ய முடியும் எனவும் உணவகங்களின் உரிமையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் மக்கள் முன்னர் கொள்வனவு செய்த விலைக்கு கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ், பரோட்டா, சோட்டீஸ் என்பனவற்றை கேட்பது எந்த வகையில் நியாயமாகும் எனவும் உணவகங்களின் உரிமையாளர்கள் கேட்கின்றனர்.

இதனால்தான் கடனுக்கு மேல் கடன் பட முடியாத காரணத்தால் உணவகங்களை மூடிவிட்டு, வெளிநாடு செல்ல தயாராகி வருவதாக பல உணவகங்களின் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு எவ்விதமான முன் அறிவித்தலுமின்றி மேற்படி உணவகங்களில் பணிபுரிந்த பல தொழிலாளர்கள் தற்போது தொழிலை இழந்துள்ளனர். இதனால், அவர்களின் வாழ்வாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இன்னும், பொருளாதார நெருக்கடி சவாலுக்கு முகம் கொடுத்து உணவங்களை நடாத்திச் செல்லுகின்ற போதிலும், வியாபாரம் மந்தகதியில் காணப்படுவதனால், அங்கு கடமைபுரியும் தொழிலாளர்களை குறைப்பதற்கும், உணவங்களின் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் சில உணவகங்களின் உரிமையாளர்கள் முன்னர் வழங்கிய சம்பளத்தை விட குறைவான சம்பளத்தையே வழங்கி வருவதாகவும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்பளத்தை அதிகரித்துக் கொடுக்குமாறு கேட்டால் வேறு ஒரு தொழிலை பார்த்து செல்லுமாறு கூறுகிறார்கள் என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த தொழிலை விட்டுவிட்டு சென்றால் தமக்கு வேறு எந்த தொழிலும் கிடைக்காது என்ற காரணத்தால் தாங்கள் குறைந்த சம்பளத்தில் அதிக நேரம் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, சில உணவகங்கள் மண்ணெண்ணெயில் தயாரிக்கப்பட்ட அடுப்புகள் மற்றும் விறகுகளைக் கொண்டு உணவுகளை தயாரிக்கின்ற போதிலும் மக்கள் ஹோட்டல் சாப்பாடுகளை கொள்வனவு செய்வதில் ஆர்வமின்றி காணப்படுவதாகவும் இதனால், நாளாந்தம் உணவுப் பொருட்கள் மிச்சப்படுவதாவும் உணவகங்களின் உரிமையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடன்களுக்கு பொருட்களை கொள்வனவு செய்து, இவ்வாறு உணவகங்களை நடாத்திச் செல்லுகின்ற போது இவ்வாறு வியாபாரம் மந்தகதியில் காணப்படுவதால் தாங்கள் மேலும் கடும் நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருவதாகவும் உணவகங்களின் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, புத்தளத்தில் பகல் மற்றும் இரவு நேர உணவகங்கள் மூடப்பட்டுள்ளதால் வெளிமாட்டங்களில் இருந்து வரும் பயணிகள், வாகன சாரதிகள் தமது உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது என்பது பெரிய சாதனை அல்ல. அந்தக் குழந்தைக்கு தேவையான அத்தனை நலன்களையும் கொடுத்து வளர்த்தெடுப்பதுதான் தந்தையின் சாதனை எனச் சொல்லி கேள்விப் பட்டிருக்கின்றோம்.

அதுபோலதான் இந்த நாட்டில் வாழும் மக்களின் நலன்கள் விடயத்தில் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டியது கட்டாயமாகும்.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக அனைத்தையும் இழந்து நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியிருக்கின்ற இந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். போகின்ற போக்கைப்பார்த்தால் அதுவும் சரிவருமா என சிந்திக்கத்தோண்டுகின்றது.

இயற்கையைத் தொலைத்துவிட்ட

செயற்கை வாழ்க்கை

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com

இயந்திர மயமான இந்த நவீன கட்டமைப்பிலே, ஒரு வகையான செயற்கை வாழ்க்கை முறைதான் நம்மிடையே நிரந்தர இடம்பிடித்திருக்கிறது. எல்லாமே செயற்கையாகிப் போய்விட்டது. துரதிருஷ்ட வசமாக, மனிதர்களின் குணங்கள் கூட செயற்கையாகிப் போய்விட்டதால் அவநம்பிக்கைகளும் ஏமாற்று மோசடிகளும் பித்தலாட்டங்களும் பிரச்சினைகளும் உருவாகி விட்டன.

அடிப்படையில் மனித ஆயுள், இயற்கை, இயல்பு என்பனவற்றைப் புறந்தள்ளி விட்டு எல்லாமே மனித மௌட்டீக கற்பனைகளில் இடம்பிடித்து விட்டதால் ஒட்டு மொத்தத்தில் இந்த உலகமே நாசகார அழிவுகளால் சூழப்பட்டுள்ளது.

மனிதன் தனது கண்டுபிடிப்புக்களால் தன்னைத்தானே அழிவுக்குள்ளாக்கிக் கொள்வதோடு இயற்கைக்கும் நிரந்தரத் தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதால், இந்த உலகம் மனிதர்களும் இன்னபிற ஜீவராசிகளும் வாழ்வதற்கு இலாயக்கற்ற ஓர் இடமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

ஆதலால்தான் எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பான, பழுதற்ற உலகை விட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் ஆர்வலர்கள் அங்கலாய்க்கிறார்கள், ஆதங்கப்படுகின்றார்கள்.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை

இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. வாழ்வைக் கற்றுக்கொடுக்கிறது. இயற்கை இல்லை என்றால் மண்ணில் ஈரமில்லை, விளைச்சலில்லை, அறுவடையில்லை, மனித வாழ்க்கை இல்லை. ஏன் உயிரினங்களுமில்லை.

உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கி வருவது இயற்கைதானே.

மனித வன்முறைகளால் பாதிக்கப்பட்டு தனது பூர்வீக வாழ்விடத்தையும் உடமைகளையும் இழந்து, நிர்க்கதியான நிலையில், அகதியாகிப்போய் மனமுடைந்த நிலையில் தத்தளித்தக் கொண்டிருந்த ஹதீஜாவுக்கு, இப்பொழுது இயற்கையோடு இணைந்த வாழ்க்கை மகிழ்ச்சியை அளித்திருக்கிறது.

மனித உறவுகளை நம்பியிருந்து அதனால் பாதிக்கப்பட்டு அகதியாகிப்போன ஹதீஜாவுக்கு, இப்பொழுது இயற்கையாக மனிதர்களோடு அண்டி வாழும் ஜீவராசிகள், வாழ்வையும் வளத்தையும் மன மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் தந்திருக்கின்றன.

வயதில் 60 ஐக் கடந்திருக்கும் அப்துல் ஹமீது ஹதீஜா, மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டிய கொடுவாமடு எனும் சிறிய ஒரு கிராமத்தில் சகோதர தமிழ் சமூகத்தாரோடு ஒரேயொரு முஸ்லிம் குடும்பமாக, பெற்றோருடன் அங்கேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து, வாழ்ந்து வந்தவர்.

ஆனால், 1985ல் கிழக்கில் ஏற்பட்ட இன வன்முறைகள் ஹதீஜாவையும் விட்டு வைக்கவில்லை.

உடமைகள், வீடுவாசல், தொழில் என்பனவற்றுடன் ஊரைப் பிரிந்து உறவுகளைப் பிரிந்து அகதியாகி நிர்க்கதியான அவருக்கு ஆரம்பத்தில் 1985களில் உதவிகரமாக இருந்தது மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் வேலைதான். கதியற்றுப்போன தனது பெற்றோருக்கும் சகோதரங்களுக்கும் அதன்மூலம் அவரால் கஞ்சி ஊற்ற முடிந்தது.

உள்நாட்டு ஆயுதப் போர் முடிந்ததும், தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த தனது பூர்வீக இடத்திற்குத் திரும்பலாம் என ஆவலோடு இருந்த ஹதீஜாவுக்கும் அவரது குடும்பத்திற்கும் பேரதிர்ச்சி காத்திருந்தது.

அவரது வாழ்விடத்தை அங்கே வேறு நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இன வாதம், அங்கே இன உறவுகளை இனிமேலும் வளரா விடாமல் ஆக்கிரமித்துக் கொண்டது.

மனமுடைந்துபோன ஹதீஜா தனது பூர்வீக இடத்தை கண்ணீர்மல்க விட்ட கன்று இப்பொழுது அம்பாறை மாவட்டம் வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரத்தில் தனவந்தர்களின் காணியில் அடைக்கலமாக உள்ளது

இப்பொழுது அங்கே அவரைச் சுற்றி மனிதரை அண்டி வாழும், மனிதர்களுக்கு வாழ்வளிக்கும், பிராணிகள் உள்ளன. அவற்றை அவர் அக்கறையோடு அரவணைத்துப் பராமரிக்கிறார்.

பல வித கோழிகள், வாத்து, புறா, தீக்கோழி, முயல் என்பனவற்றுடன் ஆடு, மாடுகளையும் பராமரித்துக் கொண்டு வீட்டுத் தோட்டத்தையும் செய்கிறார். பால், தயிர், நெய், முட்டை, இறைச்சி, மரக்கறிகள், கிழங்குகள், அரிசி என்பனவற்றிற்கு குறைவில்லை.

பஸியா என்று ஒரு சிறிய குரலில் கூவி அழைத்தவுடன், அவர் வளர்க்கும் ஆடுகளில் ஒன்று தனது குரலில் பதிலளித்துக் கொண்டு ஹதீஜாவின் காலடிக்கு ஓடி வருகிறது. தாயை இழந்த அந்த ஆட்டுக் குட்டிக்கு, ஹதீஜா சூப்பியில் மாட்டுப்பாலை பருக்குகிறார். வயிறு நிரம்ப குடித்து விட்ட பஸியா ஏதோ கனைத்து (நன்றி கூறி)க் கொண்டு ஹதீஜாவை முத்தமிட்டு துள்ளிக் குதித்து ஓடுகிறது.

தான் வளர்க்கும் கோழிகளை கதீஜா அழைத்ததும் அத்தனை வகையான கோழிகளும் சேவல்களும் இன பேதமின்றி கதீஜாவைச் சூழ்ந்து கொள்கின்றன. ஒரு சில கோழிகள், பாச மிகுதியால் அச்ச உணர்வின்றி கதீஜாவின் தோளிலும் ஏறி நின்று கொண்டு கதீஜா அளிக்கும் தீனியை உண்கின்றன.

இதேவேளையில் மேய்ச்சலுக்குச் சென்றிருந்த எருமைகள், கதீஜாவைத் தேடி வருகின்றன. ஹதீஜாவால் ராணி என்று பெயர் சூட்டப்பட்ட எருமை ஹதீஜாவின் அருகே வந்து ஹதீஜாவை வருடிக் கொடுக்கிறது. பதிலுக்கு ஹதீஜாவும் அதனைக் கட்டித் தழுவி முத்தமிடுகிறார். இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற மற்ற எருமைகளும் ஹதீஜாவைச் சூழ்ந்து கொள்கின்றன.

ராணி என்று ஹதீஜாவால் அழைக்கப்படும் எருமை மூன்றே மாதமான தனது கன்றை இழந்து விட்டது. ஆனாலும் அது இன்னமும் தனது பாலைச் சுரக்கிறது. அதற்காகவே தன்னை தினமும் நாடி வந்து பாலைக் கறந்து கொள்ளும்படி சங்கேத மொழியால் அந்த எருமை அழைப்பதாக ஹதீஜா புளகாங்கிதம் அடைகிறார்.

இயற்கையோடு, ஜீவாராசிகளோடு நாம் வைத்துக் கொள்ளும் உறவு அலாதியானது அற்புதமானது அரவணைப்பு நிறைந்தது. மனிதர்கள் காட்டும் போட்டி, பொறாமை, இன, மத, மொழி, பிரதேச வாதங்களுக்கு அப்பாற்பட்டது. ஆண், பெண் பாலினப் பாகுபாடு இல்லாதது. அதனால் தனக்கு இப்போது நிறைவும் நிம்மதியும் கிடைப்பதாகக் கூறி பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

தன் காலடிக்கு நாடி வருவோருக்கு தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பாகுபாடில்லாமல் தனக்கு கிடைத்த இயற்கையின் கொடைகளை ஹதீஜா தன்னால் முடிந்தளவு வழங்கிக் கொண்டிருக்கிறார். பாடசாலைக்கே சென்றிருக்காத ஹதீஜாவுக்கு சிறந்த முறையில் எழுத வாசிக்கத் தெரிகிறது. இப்பொழுது அவருக்கு தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து பின்னர் இன வாதத்தின் காரணமாக மனிதர்களால் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்ட மனக் காயம் குணமடைந்திருப்பதாகக் கூறுகிறார்.

இயற்கை மனிதனோடு தொடர்புடையது. இயற்கையோடு மனிதன் கூட்டுறவாக இருந்தால் அன்றி அவன் சிறக்க இயலாது. இயற்கை ஒரு பெரிய குறியீடு. அதன் ஒவ்வொரு பொருட்கூறும் ஆய்வுக்குரிய ஒரு உண்மையை மறைத்து வைத்துள்ளது.

இயற்கை ஒரு சிறந்த போதகர்;. அதன் ஒவ்வொரு சொற்பொழிவும் கருத்துச் சிறப்புடையது.

டொலர் வரக்கூடிய ஒரு வழி

ச.சேகர்
business@tamilmirror.lk

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சனைகளுக்கு பிரதான காரணம் நாட்டின் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையாகும். குறிப்பாக டொலர்கள் இன்மையினால் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படை இறக்குமதிப் பொருட்களைக் கூட கொடுப்பனவுகளை மேற்கொண்டு இறக்குமதி செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பொது மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், பல இன்னல்களுக்கும் முகங்கொடுத்த வண்ணமுள்ளனர். இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் நிலையில், அவற்றைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

நாட்டினுள் அந்நியச் செலாவணியைக் கொண்டு வருவதற்கான திட்டங்கள் தற்போதைய அத்தியாவசிய தேவையாக அமைந்துள்ளது. பாராளுமன்றத்திலும், பொது மேடைகளிலும் இதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், டொலர் இன்மையே இந்தப் பிரச்சனைக்கு காரணம் எனக்கூறி வந்தாலும், அதனை நாட்டினுள் கொண்டு வருவதற்கு எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பது பற்றி இதுவரையில் பயனுள்ள, நடைமுறைச் சாத்தியமான எந்தவொரு திட்டங்களையும் முன்வைப்பதை காண முடியவில்லை.

தற்போது அரசியலில் அதிகளவு பேசப்படும் நபராக அமைந்திருக்கும் பிரபல தொழிலதிபர் தம்மிக பெரேராவும் நாட்டுக்கு 2030 ஆம் ஆண்டளவில் பயன்தரக்கூடிய பத்தாண்டு திட்டமொன்றை முன்மொழிந்திருப்பதை அவதானிக்க முடிந்திருந்தது. இதில் வெளிநாட்டவருக்கு இலங்கையில் குறிப்பிட்ட அமெரிக்க டொலர்களை வைப்புச் செய்வதனூடாக அவர்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு குடியுரிமை வழங்குவது போன்றதான முன்மொழிவுகள் உள்ளடங்கியுள்ளன.

நாட்டின் பிரதான அந்நியச் செலாவணி வருவாயீட்டும் துறைகளில் ஒன்றான சுற்றுலாத் துறை கடந்த மார்ச் மாதமளவில் ஓரளவு தலைநிமிர்த்தியிருந்த போதிலும், மார்ச் மாத இறுதியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டங்கள், நெருக்கடி நிலைகள் காரணமாக, சுற்றுலாப் பயணிகளின் வருகை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்நிலையில், குறுகிய காலப்பகுதிக்கு தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளே வரத் தயங்கும் சூழலில், பத்தாண்டு காலப்பகுதிக்கு, தம்வசமிருக்கும் பணத்தை இலங்கையில் முதலீடு செய்து அல்லது வைப்புச் செய்து தங்கியிருப்பது தொடர்பான தீர்மானத்தை எந்தவொரு அறிவார்ந்த நபரும் மேற்கொள்வாரா என்பது சந்தேகமாகவே அமைந்துள்ளது. குறிப்பாக, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிச் சூழலில், இளம் இலங்கையர்கள் பலர் வெளிநாடுகளுக்கு செல்வதில் அதிகளவு ஆர்வம் காண்பிக்கும் ஒரு சூழலில், இவ்வாறான முன்மொழிவுகள் நகைக்கும் செயற்பாடுகளாக அமைந்திருக்கின்றன.

சரி, நாட்டினுள் டொலர் கொண்டு வருவதற்கு எவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் எனப் பார்த்தால், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்றும் பலர் தமது சொந்தங்களுக்கு தாம் உழைக்கும் பணத்தை அனுப்புகின்றனர். இதற்காக வங்கிகளைப் பயன்படுத்துமாறும், அதற்காக அவர்கள் அனுப்பும் பணத்துக்கு மேலதிகமாக சில்லறைகளை வழங்குவதாக குறிப்பிட்டும் அண்மைக் காலத்தில் மத்திய வங்கியினால் அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருந்தன.

ஆனாலும், உண்டியல் எனப்படும் நபர்களினூடாக பணத்தை அனுப்பும் முறையையே இன்றும் பலர் பின்பற்றுகின்றனர். ஏனெனில் இது அவர்களுக்கு அதிகளவு இலாபத்தை வழங்குவதாக அமைந்துள்ளது. குறிப்பாக நாணயமாற்று விகிதத்தை எடுத்துக் கொண்டால், உண்டியல் முறையில் பணத்தை அனுப்பும் போது, வங்கிகளால் வழங்கப்படும் நாணயப் பரிமாற்றத்தை விடவும், அவர்களின் பெறுமதி உயர்வாக உள்ளது. அத்துடன், வங்கிகளால் அறவிடப்படும் சேவைக் கட்டணங்களை விடவும் குறைவான கட்டணங்களை இந்த உண்டியல் செயற்பாட்டாளர்கள் பெறுகின்றனர்.

உண்டியல் முறை என்பது உண்மையில் நாட்டுக்கு எவ்விதமான நன்மையை ஏற்படுத்துவதில்லை. வங்கிக் கட்டமைப்புக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும் பட்சத்திலேயே, அதனைக் கொண்டு நாட்டுக்கு தேவையான இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு வெளிநாடுகளில் பணியாற்றுவோரைக் கவர்வதற்காக செய்யக்கூடிய ஒரு திட்டமாக, இலங்கையில் வசிக்கும் அவர்களின் உடனடி குடும்பத்தாருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கத்தினால் மேற்கொள்ளலாம். குறிப்பாக, தற்போது வயது, பால், இன வேறுபாடின்றி அனைவருமே வரிசைகளில் நின்றே எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள் போன்ற தமக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்கின்றனர்.

இந்நிலையில், வெளிநாடுகளில் பணியாற்றுவோருக்கு அரசாங்கத்தினால் அறிவிப்பு வழங்கி, தாம் பணியாற்றும் நாட்டிலுள்ள வெளிநாட்டு தூதரகத்தில் தம்மைப் பதிவு செய்து, அவர்கள் தமது இலங்கையிலுள்ள உறவுகளின் வங்கிக் கணக்குக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகை பணத்தை அனுப்பும் போது, இங்குள்ள உறவுகளின் இருப்பிடத்துக்கு அவர்களுக்கு தேவையான மருந்துப் பொருட்கள், எரிவாயு போன்றவற்ற விநியோகிக நடவடிக்கை எடுக்கலாம். அதுபோன்று எரிபொருள் நிரப்புவதற்கு அவர்களுக்கென வாரத்தில் குறிப்பிட்ட சில தினங்களில் நேரத்தை ஒதுக்கி, வரிசைகளில் காத்திருக்காமல், குறிப்பிட்டளவு எரிபொருளை பெற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தலாம். அதுபோன்றே அரிசி, மா, சீனி மற்றும் பருப்பு போன்ற உணவுப் பொருட்களையும் அவர்களின் இருப்பிடத்துக்கு வழங்க, அல்லது அருகாமையிலுள்ள சதொச நிலையத்தினூடாக அவர்களுக்கென காலம் ஒதுக்கி, பெற்றுக் கொள்ள வசதியை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதற்காக அவர்களுக்கென ஒரு விசேட அடையாள அட்டையை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம்.

இவ்வாறன செயற்பாட்டினூடாக, வெளிநாட்டில் பணியாற்றும் பணியாளர்கள் தமது உறவுகளின் நலன் பேணப்படுவதை உணர்ந்து, தொடர்ந்தும் இந்த சட்டபூர்வமான முறைகளினூடாக நாட்டுக்கு, தமது உறவுகளுக்கு பணத்தை அனுப்புவார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக சட்டபூர்வமான முறைகளினூடாக நாட்டுக்கு அனுப்பும் வெளிநாட்டு பணியாளர்களின் பண அனுப்புகை வெகுவாக குறைவடைந்துள்ளதாக அண்மையில் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டிருந்த புள்ளி விவரங்கள் காண்பிக்கின்றன.

குறிப்பாக, கடந்த ஆண்டின் ஜனவரி முதல் மே மாதத்தில் நாட்டுக்கு கிடைத்திருந்த வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள் அனுப்பிய பணத்துடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி 53% வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உதாரணமாக நாட்டின் மாதாந்த நுகர்வுக்கு அவசியமான எரிபொருள் கொள்வனவுக்கான தொகை 550 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்துள்ளது. மே மாதத்தில் இலங்கைக்கு 304 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்களால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், அவர்களை கவரும் (மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட சில்லறைத் திட்டங்களல்ல) மேற்படி முன்மொழிந்த குடும்பத்தாருக்கு வெகுமதியளிக்கும், அவர்களுக்கு முன்னுரிமையளிக்கும் திட்டங்களில் அரசாங்கம் கவனம் செலுத்துமானால், இந்தத் தொகையை மாதாந்த எரிபொருள் கொள்வனவுக்கு தேவையான அளவுக்கு அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

எரிபொருள் விநியோகத்துக்கு ஜூலை மாதம் முதல் வாரம் முதல் கோட்டா (கூப்பன்) முறைமையை அறிமுகம் செய்ய எதிர்பார்ப்பதாக எரிசக்தி அமைச்சர் தமது டுவிட்டர் கணக்கில் பதிவிட்டிருந்தார். இதன் நடைமுறைச் சாத்தியம் எவ்வாறு அமைந்திருக்கும் என்பது பற்றி உடனடியாக அறிந்து கொள்ள முடியாவிடினும், இவ்வாறான திட்டங்களுக்கு மாறாக, இது போன்ற மக்களுக்கு பயனளிக்கக்கூடிய நாட்டுக்கு டொலர்களை கொண்டு வரக்கூடிய திட்டங்களில் கவனம் செலுத்தலாம்.

புதிய பிரதமர் பதிவியேற்று ஒரு மாத காலம் கடந்து விட்ட நிலையில், மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதாக வழங்கியிருந்த உறுதி மொழிகளில் எவ்விதமான முன்னேற்றங்களும் இதுவரையில் பதிவாகியிருப்பதை காணமுடியவில்லை. 21 ஆம் திருத்தமும் இதுவரையில் வரவில்லை.

வெளிநாட்டு பணியாளர்களின் பண அனுப்புகை

முதல் ஐந்து மாத பெறுமதி 1.335 பில். அமெ.டொலர்கள், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 53% வீழ்ச்சியாகும்



ஆதாரம்: மத்திய வங்கி

எமது அறிவுக்கு எட்டிய உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரக்கூடிய ஒரு தீர்வை நாம் இங்கு முன்வைத்துள்ளோம், வாசகர்களாகிய உங்களிடமும் இது போன்ற சிந்தனைகள், கருத்துகள் இருந்தால் அவற்றை business@tamilmirror.lk எனும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்.

வெறுப்பை எதிர்த்து போராடுவோம்

ஜூன் 18, 2022, வெறுப்புப் பேச்சை எதிர்ப்பதற்கான ஆரம்ப சர்வதேச தினமாகும். உலகளாவிய எழுச்சி மற்றும் வெறுப்பு பேச்சு மீதான அக்கறையை அங்கீகரித்து, கடந்த ஆண்டு ஜூலை மாதம், ஐ.நா. பொதுச் சபை "மதங்களுக்கிடையேயான மற்றும் கலாசாரங்களுக்கு இடையேயான உரையாடலை மேம்படுத்துதல் மற்றும் வெறுப்பூட்டும் பேச்சை எதிர்ப்பதில் சகிப்புத்தன்மை" என்ற தீர்மானம் ஒன்றை ஏற்றுக்கொண்டது. இந்தத் தீர்மானமானது ஜூன் 18 ஐ வெறுப்பு பேச்சுக்களை எதிர்ப்பதற்கான சர்வதேச தினமாக அறிவித்தது.

"முதன் முறையாக, பாகுபாடு, இனவெறி மற்றும் வெறுப்புப் பேச்சு ஆகியவற்றை எதிர்ப்பதற்கான உலகளாவிய முன் முயற்சியில் ஒரு மைல்கல்லை இந்த நாள் குறிக்கின்றது, இந்த நாளைக் கொண்டாடும் போது, மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் அமைதிக்கான மரியாதையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வெறுப்பு பேச்சுகளின் முன்னோடியில்லாத பெருக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான நமது முயற்சிகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை நாம் நினைவுபடுத்துகின்றோம்" என்ற பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவி கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

> **வெறுப்பூட்டும் பேச்சை அடையாளங் காணவும், எதிர்கொள்ளவும் மற்றும் எதிர்ப்பதற்கான உத்திகளை வகுப்பதற்காகவும் இலங்கையில் கொள்கை உரையாடல் ஒன்றைத் தொடங்க உறுதி**

குறிப்பிடத்தக்க வகையில், வெறுப்பூட்டும் பேச்சை எதிர்ப்பதற்கான தேவையும் பொறுப்பும் அரசிடம் மட்டுமல்ல, தனியார் துறை, ஊடகங்கள் மற்றும் இணைய நிறுவனங்கள், சமூகத் தலைவர்கள், சிவில் சமூகத்தின் அங்கத்தவர்கள் அல்லது தனிநபர்கள் உட்பட பல உறுப்பினர்கள் மீதும் உள்ளது. இது குறிப்பாக, சமூக வலைத்தளங்களின் எழுச்சியின் பின்னணியில், இணையத்தளத்திற்கான அணுகல் உள்ள எவருக்கும் குரல் எழுப்புவதற்கான தளத்தை அவை வழங்குவதனால், ஒவ்வொரு மனிதனுக்கும் வெறுப்பு பேச்சு தொடர்பான விழிப்புணர்வுடனும் மற்றும் அவற்றை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்தவும் வேண்டிய தார்மீக கடமை உள்ளது. எனவே, இது ஒரு சுருக்கமான முன்முயற்சி அல்ல, ஆனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் மிகவும் பொருத்தமானது, ஏனெனில் எவரும் வெறுக்கத்தக்க பேச்சுக்கு இலக்காகலாம், குறிப்பாக இன்றைய இணையத்தள இயக்க உலகில். 2021 இல் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் மிகவும் எளிமையாக வெளிப்படுத்தப்பட்டது போல், "வெறுப்பு என்பது அனைவருக்கும் ஆபத்தானது - எனவே அதை எதிர்த்துப் போராடுவது அனைவருக்கும் ஒரு கடமையாக இருக்க வேண்டும்."

பெண்கள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு இந்த நாள் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் வெறுப்பூட்டும் பேச்சுக்கு இலக்காகின்றார்கள். இது தொடர்பில், கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கருத்துத் தெரிவிக்கையில், "பெருமளவு ஆண் ஆதிக்கம் மிக்க ஒரு துறையில் ஈடுபட்டுள்ள பெண் அரசியல்வாதிகள் என்ற வகையில், பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்திற்கு இந்த நாள் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது அத்துடன் வெறுப்புப் பேச்சை எதிர்ப்பதற்கான உலகளாவிய முயற்சியில் எமது வகிபங்கின் உடனடித் தேவை மற்றும் பொறுப்புணர்வை நாம் உணர்கின்றோம்." எனக் குறிப்பிட்டார்.

> **வெறுப்பு பேச்சு தொடர்பான விழிப்புணர்வுடனும் மற்றும் அவற்றை எதிர்ப்பதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்தவும் வேண்டிய தார்மீக கடமை உள்ளது. எனவே, இது ஒரு சுருக்கமான முன்முயற்சி அல்ல, ஆனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் மிகவும் பொருத்தமானது**

"கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்தின்" மீது வெறுப்புப் பேச்சுகளை எதிர்க்கும் நடவடிக்கைகளின் தாக்கத்தைச் சுற்றி ஒரு பேச்சு உள்ளது என்பதை ஒப்புக்கொள்வது முக்கியமானதாகும். பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் என்பது ஒரு அடிப்படை உரிமை ஆகும் மற்றும் இது ஈடுபாட்டிற்கான சுதந்திரம், ஒரு மதத்தை கடைப்பிடிப்பதற்கான சுதந்திரம் போன்ற பிற மனித உரிமைகளை ஆதரிக்கும் எந்தவொரு ஜனநாயகத்தினதும் அடிப்படையாகும். "உங்களுக்கு என்ன தேவைப்படுகின்றது, எந்த வகையிலும் எந்த விதமான விளைவுகளையும் சந்திக்காமல் நீங்கள் அவற்றை விரும்பும் விதத்தில் பெற்றுக் கொள்வதற்கான சலுகைகள் வழங்கப்படுகின்ற ஒரு பணியிடத்தில் இருந்து வருகின்ற எனக்கு, பேச்சுச் சுதந்திரமானது ஒருபோதும் சுயநலத்திற்காகவும் மற்றும் ஆயுதமாகவும் பயன்படுத்தப்படக்கூடாது என்று நம்பிக்கையுடன் கூறுவதில் எனக்கும் மற்றும் ஏனைய பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் உறுப்பினர்களுக்கும் நேரடி அனுபவம் உண்டு. ஆனால் அது உண்மையில், மிரட்டல் மூலம் வேறொரு கட்சியை எதிர்க்கும்; நோக்கில் அவ்வாறு செய்யப்படுகின்றது." என்று டாக்டர் பெர்னாண்டோபுள்ளே கூறினார். எனவே, வெறுப்பு பேச்சுக்கு எதிரான நடவடிக்கைகள் பேச்சு சுதந்திரத்தை வளர்ப்பதற்கான முன்முயற்சிகளாக வரவேற்கப்பட வேண்டும், ஏனெனில் இது எந்த வகையிலும் சமூகத்தில் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு முழுமையான உரிமை அல்ல.

"நவம்பர் 2021 இல், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்களாக இருக்கும் ஆண்களால் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களை வாய்மொழியாகத் துன்புறுத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி பாராளுமன்ற சபாநாயகருக்கு பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் சார்பில் கடிதம் எழுதுவதற்கு நான் முயற்சி எடுத்தேன்", என்று டாக்டர் பெர்னாண்டோபுள்ளே மேலும் கூறினார். நாட்டை ஆளுவதற்கான சட்டங்கள் வகுக்கப்படும் இடத்திலேயே, பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் உறுப்பினர்களை நோக்கி, அநாகரீகமான, முறையற்ற மற்றும் அத்துமீறும் கருத்துக்கள் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன.

"வெறுப்பூட்டும் பேச்சை அடையாளங் காணவும், எதிர்கொள்ளவும் மற்றும் எதிர்ப்பதற்கான உத்திகளை வகுப்பதற்காகவும் இலங்கையில் கொள்கை உரையாடல் ஒன்றைத் தொடங்க நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். வெறுப்புப் பேச்சு மற்றும் அதன் தாக்கத்தை முதலில் புரிந்துகொள்வது, வெறுப்புணர்வை எதிர்ப்பதில் நமது பங்கை நிறைவேற்றுவதற்கான தொடக்கப் புள்ளியாகும், அதன் பின்னர் வெறுக்கத்தக்க பேச்சை அடையாளங் காணவும், அவற்றை எதிர்த்துப் போராடவும், எதிர்க்கவும் வழிமுறைகளை உருவாக்கவும் வேண்டும்.", என்று டாக்டர். பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

மன்னாரில் 20 வருடங்களாக

ஏழைச் சிறுவர்களின்

‘அன்பு சகோதரர் இல்லம்’

எஸ். றொசேரியன் லெம்பேட்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு சிக்கல்களை மக்கள் தொடர்சியாக சந்தித்த வண்ணம் உள்ளனர். பொருட்களின் விலைவாசி உணவு தட்டுப்பாடும் நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளது. இவ்வாறான நிலையிலும் மன்னார் மாவட்டத்தில் கீரி கிராம சேவகர் பிரிவில் உள்ள அன்பு சகோதரர் இல்லமானது ஏழை பிள்ளைகள் மற்றும் தாய் தந்தையை இழந்த அல்லது அவர்களில் ஒருவரை இழந்து வறுமையில் வாடும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான கல்வி மற்றும் உணவு, உடை உறைவிடம், போன்ற தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

அதே நேரம் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்விக்கும் கைகொடுத்து வருகின்றது இந்த அன்பு சகோதரர் இல்லம்.

மன்னாரை சேர்ந்த தருமன், வீமன் எனும் இரு சகோதரர்களால், ஏழைகளின் நல்வாழ்வுக்காக உதவ எண்ணிய சில நல் உள்ளங்களுடன் இணைந்து 2001 ஆண்டு இந்த இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் இல்லமானது வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்திலும், மன்னார் பிரதேச செயலகத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 20 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வரும் இவ் இல்லம் பிள்ளைகளின் கல்வி மாத்திரம் இல்லாமல் ஒழுக்கம், சுயதொழில் பயிற்சி,விளையாட்டு போன்ற பல்வேறு விடயங்களை அவர்களின் கல்வி திட்டத்தின் ஊடாக கற்பித்து வருகின்றனர்.

பெரும்பாலும் மன்னார் மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களை சேர்ந்த அதிகளவான பிள்ளைகள் இங்கு தங்கி தங்கள் கற்றல் நடவடிக்கைகளை இலவசமாக பெற்றுக் கொள்கிறார்கள்.

மேலும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், அதே நேரம் தாய் தந்தை விவாகரத்து காரணமாக பிரிந்து வாழும் கல்வியை தொடர முடியாது கஷ்டப்படும் பிள்ளைகளும் அன்பு சகோதரர் இல்லத்தின் ஊடாக பயன் அடைந்து வருகின்றனர்.

குறிப்பாக இங்கு பராமரிக்கப் பட்டவர்கள் தற்போது அரச வேலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலை செய்வதோடு, சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் சிலர் பல்கலைகழகங்களுக்கும் தெரிவாகியுள்ளமை பாராட்டுக்குரியதாகும் .

சிலர் இல்லத்தில் கல்வி கற்று இவ் இல்லத்திலேயே பணியாற்றியும் வருகின்றனர். இவ்வாறன பணிகளை செய்து வருகின்ற இவ் இல்லத்திற்கு உங்களின் அன்பான ஆதரவு அவர்களின் செயற்பாட்டையும் சேவையையும் என்னும் விரிவுபடுத்த உதவலாம்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை சமாளிக்க உதவக்கூடிய, ஏழைச் சிறுவர்களின் கல்வியில் ஆர்வம் கொண்ட நன்கொடையாளர்கள் உதவ முடிந்தால் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உங்களால் முடிந்த உதவியை செய்யுங்கள்.

அதேவேளையில், எவ்வளவு நெருக்கடி வந்தாலும் இந்த சேவையை நாங்கள் நிறுத்த போவதில்லை என தெரிவித்துள்ள நிர்வாகத்தினர், குடும்ப வறுமை மற்றும் தாய் தந்தையை இழந்த, கல்வியை தொடர முடியாத பிள்ளைகள் யாராக இருந்தாலும் தங்களுடன் இணைந்து கொள்ளுமாற்றும் எத்தகைய பொருளாதார பிரச்சினையாக இருந்தாலும் தங்கள் முடிந்த சேவையை அவர்களுக்கு வழங்கி அவர்களை சமூகத்தில் நல்ல பிரஜைகளாக்க அனைத்து முயற்சிகளையும் செய்வதாக அன்பு சகோதரர் இல்ல நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுயநலமாக வாழும் இவ் உலகத்தில் 20 வருடங்களுக்கு மேலாக ஏழை பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக செயற்படும் இவ்வாறான இல்லங்கள் தொடர்ந்து இயங்குவதே எமது சமூகத்தின் தேவை. எனவே எங்களால் ஆன உதவிகளை செய்வோம். அது பணமாக பொருளாக இருக்கலாம் ஏன் ஒரு வேளை உணவாக இருக்கலாம். அதுவும் அந்த ஏழை சிறுவர்களின் எதிர்காலத்தை மாற்றும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

பணத்தை வாரி இறைத்தும் பயன் பெற முடியவில்லை



மகேஸ்வரி விஜயனந்தன்

‘பேர் சொல்ல ஒரு பிள்ளை வேண்டும்’. ‘ஆசைக்கொரு பெண், ஆஸ்திக்கொரு ஆண்’ என்பவையெல்லாம் கண்டிப்பாகக் குழந்தை வேண்டும் என்பதை வலியுறுத்த வந்த பழமொழிகளாகும். இது பழமொழி என்றாலும் இந்த காலத்துக்கு மிகவும் பொருத்தப்பாடாகவே முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளனர்.

குழந்தைப் பேறு என்பது உடல் ஆரோக்கியம் என்பதற்கு மேலாக கடவுள் நம்பிக்கையுடையவர்கள் கடவுளின் கொடை என கருதுகின்றனர்.

எனவே, பிள்ளைச் செல்வம் என்பது எம்மிடம் எத்தனை சொத்து, சுகங்கள் இருந்தாலும் அவற்றை எல்லாம் விட பெறுமதியானது.

அந்த வகையில் பிரசவிக்கப்பட்ட இரட்டை சிசுக்களில் ஒரு சிசு மரணம் வரை சென்று, இன்று பெற்றோரின் கைகளில் மறுபிறவியாய் தவழும் ஓர் உண்மைச் சம்பவத்தையே இக்கட்டுரை கூறப் போகின்றது.

ஆம் அந்த இளம் தம்பதியினர் இருவரும் கை நிறைய சம்பாதிக்கும் ஒரு சிறந்த தொழிலில் ஈடுபட்டு வந்தனர். திருமணமானதுமே தமது தொழில் ரீதியான உயர் கல்வி உள்ளிட்ட விடயங்களை நிறைவு செய்து விட்டு குழந்தைப் பற்றிய எண்ணத்துக்கு வந்தனர்.

அவர்களின் எண்ணமும் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் நிறைவேறியது. ஆம் அந்த பெண்ணுக்கு ஒரே நேரத்தில் இரட்டைக் கரு உருவாகி மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

ஒரு பெண் கர்ப்பமானதும் அவளையும் அவள் சுமக்கும் குழந்தையையும் கண்ணை இமைக் காப்பது போலவே அவள் கணவனாலும் அவளைச் சார்ந்த உறவினர்களும் பாதுகாப்பார்கள்.

தனது மனைவி இரட்டைக் கருவை சுமக்கிறாள் என அறிந்த அவளது கணவன், தனது மனைவியை கொழும்பில் பிரபல தனியார் மகப்பேற்று வைத்தியசாலையொன்றில் பரிசோதனைக்காக மாதாந்தம் அழைத்துச் சென்று வந்ததுடன், பிரசவத்துக்கான ஏற்பாடுகளையும் அந்த வைத்தியசாலையிலேயே மேற்கொண்டார்.

கொழும்பில் எத்தனையோ அரசாங்க வைத்தியசாலைகள் மகப்பேற்றுக்காக காணப்படுகின்ற போதிலும் ஏனோ தனியார் வைத்தியசாலைகள் மீதான ஒரு ஈர்ப்பு, தனது மனைவியையும் பிறக்கப் போகும் குழந்தைகளையும் சிறப்பாக பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே பல இலட்சங்களை வாரி இறைத்து தனியார் வைத்தியசாலையை நாடியுள்ளார்.

சில அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்கள் மீது காட்டப்படும் பாரபட்சம், சிறந்த கவனிப்பு இன்மை, நோயாளியானாலும் சிற்றூழியர்களின் கோபங்களுக்கு காரணமே இல்லாமல் ஆளாக வேண்டும் போன்ற இன்னோரன்ன காரணங்களுக்காகவே பலர் அரசாங்க வைத்தியசாலைகளைத் தவிர்த்து தனியார் வைத்தியசாலைகளை நாடுகின்றனர். அதற்கு இந்தத் தம்பதியினரும் விதிவிலக்கல்ல.

இக்கட்டுரையின் தம்பதியினரும் தமது இரட்டைச் செல்வங்களை எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஆரோக்கியமாக பிரசவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அந்த வைத்தியசாலையை நாடினர்.

அந்த வைத்தியசாலையிலேயே, தொடர்ச்சியாக மாதாந்த கிளினிக், பரிசோதனைகளை செய்து இரட்டைக் குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பதை அறிந்து பிரசவத்துக்கான நாளை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

பிரசவ நாளுக்கு இரண்டு வாரம் இருந்த நிலையில், அவர்களை பரிசோதித்த வைத்தியர், தாயின் வயிற்றில் இரட்டைக் குழந்தைகள் மேலும் தங்கியிருந்தால் அது குழந்தைகளுக்கோ அல்லது தாயின் ஆரோக்கியத்துக்கோ பாதிப்பை ஏற்படுத்தலாம் என கருதி குழந்தைகளை 35ஆவது வாரத்தில் சிசேரியனுக்கு அனுமதி கோரினர்.

அந்த தம்பதியினரும் அனுமதி வழங்கிய பின்னர், ஆண், பெண் என அந்த அழகிய இரட்டை சிசுக்கள் இருவரும் எவ்வித பிரச்சினையுமின்றி உலகை பார்த்தனர்.

அப்போது அடைந்த மகிழ்ச்சி சில மணித்தியாலங்களே நீடித்தன. ஒரு குழந்தை 1.65, மற்றும் 1.75 கிலாகிராம் நிறைகளாக காணப்பட்டதால் இருவரும் உடனடியாக அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு, கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டனர்.

கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்ட இந்த இரண்டு சிசுக்களில் ஆண் சிசுவுக்கு சுவாசிப்பதில் சிறு பிரச்சினை காணப்பட்டதால் சுவாசத்தை இலகுப்படுத்துவதற்கான உபகரணத்தில் சிசுவை வைத்தனர்.

இவ்வாறு 3 நாள்கள் செல்லும் போது, அவர்கள் இருவரும் பூரண ஆரோக்கியத்துடன் இருந்ததுடன், 10ஆவது நாளில் பெண் சிசுவை சாதாரண கட்டிலுக்கு மாற்றியதுடன், ஆண் சிசுவையும் அடுத்த நாள் மாற்றுவதாகத் தெரிவித்தனர்.

எனினும் அந்த சிசுவுக்கு மீண்டும் சுவாசிப்பதில் பிரச்சினை ஏற்பட்டதுடன், நிறம் கொஞ்சம் வெளிறத் தொடங்கியதால் அச்சிசுவை மீண்டும் கண்ணாடிப் பெட்டியில் வைத்தனரே ஒழிய சிசு நோய் வாய்ப்படுவதற்கான காரணத்தை கண்டறிய முன்வரவில்லை.

சிசுவுக்கு சுவாசிப்பதில் பிரச்சினை வந்த போதும் அந்த சிசுவுக்கு ரத்தக்குழாய்களில் அடைப்பு, இருதய தசை வியாதி, வால்வுகளில் கோளாறு, பிறவியில் ஏற்படும் இருதய குறைபாடுகள், என்பதை கண்டறிவதற்கான எக்கோ பரிசோதனை அதுவரை குழந்தைக்கு செய்யப்படவில்லை.

ஆனாலும் ஏனைய பரிசோதனைகளை செய்த போதும் அது சாதாரண பெறுபேறுகளையே வெளிபடுத்தியதால், அந்த வைத்தியசாலையின் வைத்தியர்களால் அந்த சிசுவுக்கு என்ன நோய் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் மற்றைய சிசுவுக்கு டிக்கட் வெட்டப்படுவதால், அந்த பெண் சிசுவுடன், பெற்றோர் வீடு சென்று, மீண்டும் அந்த சிசுவுடன் இரண்டு வாரங்களின் பின்னர் அந்த வைத்தியசாலைக்குச் செல்கின்றனர். காரணம் தமது கையிலிருக்கும் சிசுவின் ஆரோக்கியத்தை அறிந்துகொள்ளவும் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கும் குழந்தையின் சிகிச்சை முன்னேற்றத்தை அறிந்துகொள்ளவும்.

இதன்போது தொடர்ந்து வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள சிசுவின் தலை வீங்கியதைப் போல் இருப்பதாக சிசுவின் தந்தை, தனது அபிப்ராயத்தை கூறும் போது, அந்த வைத்தியர் அப்படியானால் நாம் எக்கோ பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதாக தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு வைத்தியர் அவ்வாறு கூறிவிட்டு சென்ற பின்னர், அன்று மாலை தாம் வைத்தியசாலைக்கு சென்று, தனது குழந்தைக்கு எக்கோ பரிசோதனை செய்யப்பட்டதா என அங்கிருந்த தாதியிடம் தந்தை வினவியபோது, அதனை செய்வதற்கான வைத்தியர்கள் வரவில்லை. இரவு தான் வருவார்கள் என தெரிவித்துள்ளதுடன், நீங்கள் நினைப்பதை போல் வைத்தியர்கள் வரமாட்டார்கள். இரவு நோயாளிகளைப் பார்வையிடும் போது தான் இந்த அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கும் வருவார்கள் என தாதி தெரிவித்துள்ளார்.

சரியென்று அந்த தந்தை இரவும் அந்த வைத்தியசாலைக்குச் சென்று விசாரித்த போதும் சிசுவுக்கு எக்கோ செய்திருக்கவில்லை.

எனவே தனது சிசு ஆரோக்கியமாக இருப்பதால் தான் அலட்சியதாக இருக்கிறார்கள் என நினைத்தவாறு தந்தை வீடு சென்ற போது, இரவு பத்து மணியளவில் பொறுப்பான வைத்தியரிடம் இருந்து அழைப்பு வருகிறது.

சிசுவுக்கு சுவாசிப்பதில் கடுமையாக உள்ளது. சிசுவுக்கு வலிப்பு வருவது போல் உள்ளது எனவே, நீங்கள் வைத்தியசாலைக்கு கொஞ்சம் வாருங்கள் என்றார்.

எனவே பெற்றோர் பதறியடித்து, 11 மணிக்கு வைத்தியசாலைக்கு சென்ற போது, சிசுவை செயற்கை சுவாசம் வழங்கும் இயந்திரத்துக்கு மாற்றியுள்ளதாக தாதி ஒருவர் தெரிவித்தார். சரியென்று, மறுநாள் காலை 7 மணிக்கு சென்ற போதும் சிசுவுக்கு எக்கோ செய்திருக்கவில்லை. அன்று இரவு 8 மணியளவில் அந்த வைத்தியர் அழைப்பை எடுத்து,அந்த பெற்றாரை உடனடியாக வைத்தியசாலைக்கு வருமாறு அழைத்துள்ளார்.

அவர்களை அறையொன்று அழைத்துச் சென்றதுடன், அங்கு இவர்களுக்கு பொறுப்பான வைத்தியருடன் இதய சிகிச்சை நிபுணர் ஒருவரும் காத்திருந்துள்ளார்.

இதன்போது, சிசுவுக்கு எகோ செய்தாகவும் இதன்போது குழந்தையின் இதயத்தில் பிரச்சினை இருக்கின்றமையை கண்டு பிடித்ததாகவும் அந்த வைத்தியர் தெரிவித்ததுடன், அதற்கான எந்த அறிகுறியும் சிசுவிடம் இருந்து வெளிப்பாடாமையே அந்த பிரச்சினையை கண்டறிய தாமதாகியது என்றும் தெரிவித்து சிசுவை பிழைக்க வைப்பது இனிமேல் கடினமானது என்று கையை விரித்தனர்.

அத்துடன் பரவாயில்லை மற்றைய சிசுவை நல்ல படியாக பார்த்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துள்ளனர்.

எனினும் சிசுவை காப்பாற்றலாம் என்ற நப்பாசையில் , சிசுவின் தந்தை, சிசுவை காப்பாற்ற வழியே இல்லையா என வினவியதுடன், இலங்கையில் இதற்கான நிபுணர் இருக்கின்றனரா என கேட்டுள்ளார்.

அப்போது அந்த இதய சிகிச்சை நிபுணர் ஒரு வைத்தியரின் பெயரை பரிந்துரைத்துள்ளார்.

அந்த பரிந்துரைத்த வைத்தியர் தான் இன்று அந்த முழு குடும்பத்துக்கும் கடவுளாக வணங்குவதுடன், அந்த வைத்தியரின் பெயரையே இந்த ஆண் சிசுவுக்கும் சூட்டியுள்ளனர்.

நிகழ்கால உலகில் நடமாடும் தெய்வமாக நாம் போற்றுவது வைத்தியர்களைத் தான். அதேப்போல் குற்றுயிராய் கிடந்த சிசுவுக்கு உயிர்கொடுத்த கடவுளான அந்த வைத்தியர் யார்? எந்த வைத்தியசாலை என்பதை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

மக்களின் எதிர்ப்பலைகளை குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள்

நீண்ட நாள்களாக வெயில், மழை, குளிரை மட்டுமன்றி உணவையும் எதிர்பார்க்காது, எரிபொருள் உள்ளிட்ட வரிசைகளில் காத்திருக்கும் ஒருவர், எரிபொருள் நிரப்பும் நிலையத்தை அண்மித்தபோது, "இனிமேல் எப்ப வருமென தெரியாது" என்ற வார்த்தையைக் கேட்கும் போது, அவர் படும், வேதனைகளை சொற்களில் இலகுவாக கூறிவிடமுடியாது.

நெஞ்சே இடிந்து நொறுங்கிவிட்டது போலவே இருக்கும். அந்தளவுக்கு வேதனைப்பட்டிருப்பார். அவ்வாறான வேதனைகளும் சோதனைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்க, அதிகரிக்க அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் வலுப்பெறவே செய்கின்றன. அவற்றை எவருமே குறைத்து மதிப்பிட முடியாது.

இரண்டு வாரங்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்தல், இன்றேல் பொதுமுடகத்துக்குச் செல்லுதல் உள்ளிட்டவை தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. எனினும், இறுதிநேரத்தில் கைவிடப்பட்டன. ஆக, அந்தளவுக்கு பெரும் நெருக்கடிக்குள் நாடு வீழ்ந்து கிடக்கின்றது.

பெரும்பாலான மக்கள் வீதிகளிலேயே நாள்களைக் கழிக்கின்றனர். இன்னும் சிலரின் வீடுகளில் அடுப்பு எரிந்த நாள் ஞாபகத்திலேயே இல்லை. சாப்பாட்டைத் தேடித்தேடியே பலரின் பாதணிகள் தேய்ந்துவிட்டன. வெற்று இறாக்கைகளைப் பார்த்துப் பார்த்து கண்கள் கூசுகின்றன. மூடிய வர்த்தக நிலையங்களில் பல திறக்காமலேயே இருக்கின்றன. பிரதான வீதிகளும் கொஞ்சம், கொஞ்சமாக வெறிச்சோடத் தொடங்கிவிட்டன.

ஆக, ஒவ்வோர் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எத்தனை லீட்டர் எரிபொருள் அடங்கிய பவுசர்கள் வருகின்றன என்ற விவரம் காட்சிப்படுத்தப்படுமாயின், பலரும் நீண்ட நாள்களாக காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்படாது. இறுதி நேரத்தில் அறிவிப்பு விடுவதால்தான் மக்கள் ஆத்திரமடைகின்றனர்.

அரசாங்கமும் உண்மைகளை மறைக்காமல் கூறவேண்டும். இன்றைய நாளை சமாளிப்பதற்காக கூறப்படும் பொய்களால், இன்னுமின்னும் நெருக்கடிகள் கூடுமே தவிர, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான முறைமையாக அது அமையாது.

"இறுதிக் கப்பல் வந்துவிட்டது. இனி எப்போது வருமென தெரியாது" என்ற பதிலால், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசைகள் நீண்டுவிட்டன. சிலவற்றை அப்பட்டமாக சொல்லவும் கூடாது. அதேபோல, நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தேவையான எரிபொருள்களை இறக்குமதிச் செய்வதற்கு முயற்சிக்கவும் வேண்டும்.

அதனைதான், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மிகத்தெளிவாக கூறியிருக்கின்றார். மக்களை ஏமாற்றும் பொய்யான காரணிகளை கூறி இனியும் பொது மக்களை கோபப்படுத்த வேண்டாம். மாற்றம் ஒன்று வேண்டுமென நாடு முழுவதிலும் இருந்தும் மக்கள் குரல் எழுந்துள்ளன. அந்தக் குரல் எதிர்காலத்தில் இன்னும் பலமாக ஒலிக்கும். அந்த எதிர்ப்பை குறைத்து மதிப்பிடாதீர்கள் என்று எச்சரிக்கை தொனியில் அறிவுரை கூறியுள்ளார்.

எதிர்ப்பை நசுக்குவதற்கு முயன்றாலோ, அன்றேல், எதிர்ப்பலைகளை குறைத்து மதிப்பிட்டாலோ, நெருக்கடிகள் அதிகரித்துக்கொண்டே செல்லும், என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும். அரசாங்கம் கடந்த கால அனுபவத்தில் இருந்து இதனைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

மக்களின் நியாயமான போராட்டங்கள், ஒருபோதும் தோற்கடிக்கப்படுவதிலை. ஒரு வழி மறிக்கப்பட்டால், இன்னொரு வழியில் அந்தப் போராட்டங்கள் வீறுகொண்டெழும் என்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

செலவு செய்ய வேண்டிய இடத்தில் செலவு செய்தே ஆக வேண்டும். அதிசெலவாளியாகவும் கருமியாகவும் இருக்கக் கூடாது.

இந்த வாழ்வு எமக்கானது. பணம் மட்டும் வாழ்க்கை அல்ல; ஆனால், பணம் இன்றியும் எம்மால், ஓர் அடிகூட நகரமுடியாது. கஷ்டநிலையில் இருப்பவர்களுக்கு எம்மால் முடிந்தளவுக்கு உதவுதல் வேண்டும்.

எப்படி செலவு செய்ய வேண்டும்? எந்த அநாவசியமான செலவுகளை நீக்க வேண்டும் என்பதைத் தெளிவுடன் முடிவு செய்ய வேண்டும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட தொகையை சேமிப்புக்காகவும் வைத்திருக்க வேண்டும்.

பணத்தைக் கண்டதும் அதை எந்தவிதமான முன்யோசனை இன்றி, செலவு செய்பவர்களே கடன் கேட்கும் நபர்களாகின்றார்கள். பொருட்களை வாங்குவதற்கு நாணயமான வர்த்தக நிறுவனங்களில் வாங்க வேண்டும். விலைகளைக் கேட்டு வாங்க வேண்டும்.

செலவுகளைப் பதிவு செய்து கொள்ளுங்கள். செலவு எதுவெனத் தெரியாமல் செலவளிக்கக் கூடாது. சிக்கனம் முக்கியம். உழைக்கும் போதே செலவுகளைக் குறைத்து, எதிர்கால தேவைகளை நிறைவேற்ற தயாராக இருக்க வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வெளிநாட்டுக் கடன்களும் உதவிகளும்

நெருக்கடிக்குத் தீர்வாகுமா?

லக்ஸ்மன்

அடிப்படையான பிரச்சினைகளையும் காரணங்களையும் கண்டறிந்து தீர்வை ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்கரம் செய்வது போன்றே, நம் நாட்டின் நிலை உருவாகிவிட்டது.

கடந்த சில மாதங்களாக நாடு எதிர்நோக்கி வரும் அரசியல், பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. அதிருப்தியை அடக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சி, வன்முறையைக் கொண்டுவந்தது.

அடிப்படையான பிரச்சினைகளையும் காரணங்களையும் கண்டறிந்து தீர்வை ஏற்படுத்துவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற நிலையே இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது. கடந்த சில மாதங்களாக, நாடு எதிர்நோக்கி வரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு வெளிநாட்டுக் கடன்களும் உதவிகளும் நிவாரணங்களும் தீர்வாகிவிடும் என்றுதான் சிலர் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதன் மூலம் தீர்வு கிடையாது என்பதற்கு கடந்த நாள்கள் நல்ல உதாரணமாக அமைந்துவிட்டன.

இந்தியாவின் கடன் தொகையில் கிடைத்த எரிபொருள் முடிந்துவிட்டது. அமெரிக்கா ஆறு மில்லியன் டொலரை வழங்கவுள்ளது. தென்கொரியா உதவ இருக்கிறது. அரபு நாடுகளிடம் உதவி கோரிய பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. ஜப்பானின் உறவின் முக்கியம் குறித்து கருத்துகள் வெளியிடப்படுகின்றன.

இன்னமும் எரிபொருள்களுக்கான நீண்ட வரிசைக்கோ, எரிவாயுவுக்கான காத்திருப்பிலோ, மின்சாரத் துண்டிப்புக்கோ முடிவு ஏற்பட்டு விடவில்லை. கடந்த வாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய வெளியிட்டிருந்த 'ஐந்து வருடங்களுக்கு எனக்கு பதவி எழுதிக் கொடுக்கப்பட்டது' என்ற கருத்தின் பின்னரும் கூட, 'கோட்டா கோ கம' முடிவுக்கு வரவில்லை. இப்படியிருக்கையில், நாட்டின் விடிவுக்கு என்ன வழியென்று யார் சிந்திப்பது என்றாகிவிட்டது நாட்டின் நிலை.

அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தியை அடக்குவதற்கான அரசின் முயற்சி, அதிக வன்முறையைக் கொண்டுவந்து, நெருக்கடியை அதிகப்படுத்தியதே தவிர வேறு ஒரு பலனையும் தந்துவிடவில்லை.

உண்மையாகவே, இலங்கையில் புரையோடிப்போயிருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது வெறுமனே ராஜபக்ஷ குடும்பத்தினரால் அல்ல. யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற பெயரில் பற்கள் பிடுங்கப்பட்ட பாம்பாக இருந்த விடுதலைப் புலிகளையே அவர்கள் முடித்துவைத்தனர். அதன் 'கிங்மேக்கர்' ரணில் தான்.

ஆனால், இப்போது நாட்டில் இருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு முடிவு அவரால் ஏற்படுத்தப்படும் என்றுதான் எலோரும் நம்பினர். உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடியால் இன்று என்ன நடக்கும், நாளை என்ன நடக்கும் என்று ஆரூடம் கூறுபவராகத்தான் இப்போது ரணில் மாறியிருக்கிறார். இதனால், மக்களிடையே ஏற்படும் அச்சம் ஒன்றுதான், புதிது புதிதாக மாறிவருகிறது.

அமைதியான போராட்டக்காரர்கள் மீது மே 9ஆம் திகதி, காலிமுகத்திடலில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு, மற்றும் நாடு முழுவதும் பரவலான எதிர்ப்புகளால் மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குப் போகவேண்டும் என்று கோசமிட்டுக் கொண்டிருக்கையில், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி அந்தக் கோசத்தைக் குறைக்க முயற்சித்தார். அது ஒருவகையில் உண்மையுமாகத்தான் இருந்தது. ஓரளவுக்கு அந்தக் கோசம் குறைந்தது.

ஆனால், ஒரு திரளாகப் போராடும் மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளுக்கு எதிரான ஒரு விடயமாகவே அது பார்க்கப்பட்டது. ஜனாதிபதியின் தன்னிச்சையான, ஒருதலைப்பட்சமான, ஜனநாயக விரோத நடவடிக்கைகளால் நாடு பற்றியெரியும் என்றுதான் எல்லோரும் எண்ணினர். ஆனால், அதற்கு எதிரான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு நிலைமைக்கு அப்பால், தங்கள் தங்கள் குடும்பங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றதனால், இப்போது ஓரளவுக்கு ஓய்வு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஓய்வு, பின்வாங்கலாகக் கொள்ளப்படக் கூடாது.

நம்பிக்கை அல்லது ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்குரிய செயற்றிட்டங்கள் ஏதுமற்றிருக்கும் இலங்கையை, மீளுமைப்பதற்கு என்ன வழியென்பதே இந்த இடத்தில் கேள்வியாகும். எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான நீண்ட வரிசைகள், மருந்துப் பற்றாக்குறை, உணவுப் பொருட்களின் விலை உயர்வால் பொருளாதார நெருக்கடி தொடர்ந்து ஆழமடைந்து வருகிறது.

ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் பொறுப்புக்கூறலை மேன்படுத்துவதற்கான மக்களின் போராட்டம் நிலைத்து தொடரும் என்ற நம்பிக்கை குறைவடைந்துகொண்டே வருகின்ற இந்தச் சூழலில், நாட்டு மக்களின் துயரங்களைப் போக்குவதற்கும், நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் வகையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் கொள்கைகளும் செயல்களும் முக்கியமானவைகளாகும்.

அந்த வகையில்தான், கடந்த வாரத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் முன்வைத்த இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கான முன்மொழிவுகள் பார்க்கப்படவேண்டும்.

அவர்களது முன்மொழிவுகளில், பொருளாதாரம், ஆட்சிமாற்றம், பொருளாதார மற்றும் அரசியல் முட்டுக்கட்டைகள், சமூகப் பாதுகாப்பு, வரிவிதிப்பு தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல், இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு விவசாயத் துறையை மேம்படுத்துதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், இறக்குமதி - மாற்றீடு மற்றும் ஏற்றுமதிக்கான தொழில்துறையை மேம்படுத்துதல், அரசியல் சூழல் மற்றும் ஆட்சி மற்றும் சமூக ஒற்றுமைக்கான அடிப்படை தேவைகள் எனப் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள், ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் என்பன, வெளிப்படையாக இருக்க வேண்டும். இத்தகைய நிபந்தனைகள் ஏழைகளுக்கு மேலும் சுமையாக இருக்கக்கூடாது. மக்களின் இறையாண்மையையும் அவர்களின் வளங்களை அணுகுவதையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடாது. இந்தச் செயல்முறை எதிர்காலத்தில் அதிக கடன் உருவாக்கும் பொறியாக இயங்கக்கூடாது என்று சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பையும் சுகாதாரம், கல்விக்கான அரசாங்கச் செலவினங்களை குறைந்தபட்சம் தற்போதைய மட்டத்திலாவது உறுதி செய்ய வேண்டும். ஊழலை ஆதரிக்கும் வழிவகைகளை ஒழிக்க வேண்டும். சுதந்திரமான ஊழல் ஒழிப்பு கட்டமைப்பொன்றை நிறுவுதல், பொதுத் துறையை நெறிப்படுத்துதல், தொழில்மயமாக்குதல் என்பவற்றை முக்கியப்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில் குறைந்த வருமானம் கொண்ட பிரிவினரிடமிருந்து கூடுதல் மறைமுக வரி அறவிடுவதை குறைக்க வேண்டும். முற்போக்கான வருமானமுடைய வரியை அறிமுகப்படுத்துதல், வீண்விரயத்தைக் குறைத்தல், தேசிய பாதுகாப்பு மீதான செலவைக் குறைத்தல் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயத் துறையை மேம்படுத்தல் எனும் நோக்கத்தில், வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், முடிந்தவரை இறக்குமதி மாற்றீடு செய்தல், ஏற்றுமதிக்கான தொழில்துறையை மேம்படுத்தல் ஆகியனவும் இலங்கைக்கு தேவையானதே!

அதனைவிடவும் தேர்தல் மூலம் தேர்வான அரசாங்கம் அதன் சட்டபூர்வ தன்மையில் இழந்துவிட்ட நிலையில் சட்டத்தரணிகள் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் இன்னும் பிற துறைசார் நிபுணர்களின் முன்வருகைகள் தேவையானதாக உணரப்பட வேண்டும். இவை திடப்படுத்தப்பட வேண்டும்.

இந்த இடத்தில்தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் பாராளுமன்ற ஆட்சி முறை உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்னே வருகிறது. இந்தக் கோரிக்கையானது விரைவாக நிறைவேறுவது என்பது சாத்தியமற்றதாகிவிட்டது. இழுபடுகின்ற நெடுங்கயிற்றில் இருக்கின்ற பல விடயங்களால், நமது நாட்டில் எப்போது தீர்வு கிடைக்கும்?

சட்டபூர்வமான தன்மையில்லாத அரசாங்கம், மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கப்படாத சூழல், ஸ்திரமான மக்கள் நலனில் அக்கறையுள்ள செயற்பாட்டுக்கான பொறிமுறை, சிறப்பான பொருளாதாரப் பொறிமுறை என எதுவுமில்லாத நாட்டில் வெளிநாட்டு உதவிகளும், கடன்களும் எதனையும் செய்துவிடப்போவதில்லை. ஆனால், அவை நாட்டுக்கும் மக்களுடைய எதிர்காலத்துக்குமான பொறியாகவே அமைந்துவிடும்.

இந்த அச்சம் சீனா ஆரம்பத்தில் உள்ளே நுழையும் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் இப்போது அந்த அச்சம் குறைந்துவிட்டதா என்றே சந்தேகிக்கத் தோன்றுகிறது.

அந்த ஒழுங்கில்தான் அதிகாரப் பகிர்வு பொறிமுறைகளை வலுப்படுத்துதல், மக்கள் ஆட்சியில் அதிகமாகப் பங்கேற்பதைச் செயற்படுத்தும் அதிகாரப் பகிர்வு, அமைச்சுகளிடம் உள்ள அதிகப்படியான அதிகாரங்கள் அகற்றப்படல், சமூக ஊடகங்களின் சுதந்திரமான செயல்பாடு, கருத்து சுதந்திரம் மற்றும் சுதந்திரமான ஒன்று கூடல் என்பன ஏற்படுத்தப்படவேண்டும்.

அதனைவிடுத்து வெளிநாடுகளை நம்பி மேலும் மேலும் கடன் சுமைகளுக்கானவர்களாக மாறுவது நிறுத்தப்பட வேண்டும். அதற்கான வழிகளையே கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, இவைகளே தீர்வென்று இருந்துவிடக்கூடாது.

கடிதங்கள்

மூதூர்

சதோச விற்பனை நிலையத்தில் மக்கள் சிரமம்

மூதூர் நகர் பகுதியில் உள்ள சதோச விற்பனை நிலையத்தில் பொருட் கொள்வனவுக்காக வருகைதந்த பொதுமக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

மூதூர் சதோச விற்பனை நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கி பல மாதங்களாக பழுதடைந்து காணப்படுகின்றது. இதனால், மூதூர் பகுதியில் மின்சாரம் தடைபடும்போது, சதோசவுக்கு அத்தியவசிய பொருட்களை பெற வருகை வருபவர்கள், மின்சாரம் மீண்டும் வரும்வரை பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்தோடு சத்தோச விற்பனை நிலையத்தில் பொருட்களின் விலை குறைவாக இருக்குமென்று வந்தால், இங்கும் விலைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. சீனி ஒரு கிலோ 310 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.இப்படி விலைகள் அதிகரித்தால் கூலி வேலை செய்யும் நாங்கள் எங்கே போவது என மக்கள் கவலை வெளியிட்டனர்.

மூதூர் சதோச விற்பனை நிலையத்தில் அத்தியவசிய பொருட்கள் அடிக்கடி முழுமையாக முடிவடைந்து காணப்படுவதையும் அவதானிக்க முடிந்தது.

அத்தோடு இதற்கு அரசாங்கம் உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தீஷான் அஹமட்

வன்னிக்குள் உளர்களை உண்ணும் 'உவர்'

அங்கு, பாலை நிலங்கள் பயிர் நிலங்களாக மாறும்போது, இங்கு பயிர் நிலங்கள் உவர் நிலங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன.

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாட்டத்தின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள பல கிராமங்கள், நீண்ட யுத்தத்தாலும் உவர் ஆக்கிரமிப்பாலும் அழிவடைந்து வருகின்றன.

இவ்வாறு அழிவுகளை நோக்கிச் செல்கின்ற நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அங்கே பூர்வீகமாக வாழும் மக்கள் தொடர்ந்தும், வாழ்கின்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

உலகில் பல நாடுகள், மனிதர்களே வாழ முடியாத பாலைவனங்களைக் கூட, பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றி, பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றிருக்கின்றன. ஆனால், இங்கே பயிர் நிலங்கள் அழிவடைந்து, உவர்நிலங்களாக மாறிவருகின்றன.

இவ்வாறு, வளமான நிலங்கள் உவராக மாறுவதைத் தடுப்பதற்கான திட்டங்களை வகுத்து, பயிர்ச்செய்கை நிலங்களை பாதுகாக்க வேண்டுமென பலரும் கோரியிருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளத்தை அடுத்து காணப்படுகின்ற குஞ்சுக்குளம், உவரால் அழிவடைந்து அங்கு வாழ்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், ஊரை விட்டு இடம்பெயர்ந்துவிட்டதால், இன்று பற்றைக்காடுகள் மண்டிய வனமாகக் காணப்படுகின்றது.

பேரம்பலம் வேலுப்பிள்ளை (பூசகர், வயது 79) இந்தக் கிராமம் பற்றிக் குறிப்பிடுகையில் கூறியதாவது: "குஞ்சுக்குளமானது தொன்றுதொட்டு மக்கள் வாழ்ந்த கிராமம். யுத்தத்தாலும் இடப்பெயர்வுகளாலும் உவர் அணைகள் அழிவடைந்து, மண்டைக்கல்லாறு ஊடாக கடல் நீர் உட்புகுந்து, இக்கிராமம் முழுவதும் உவராகியே விட்டது.

"இதனால் இங்கு வாழ்ந்தவர்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து வன்னேரிக்குளம், அக்கராயன் போன்ற பகுதிகளுக்குச் சென்றுள்ளார்கள். இங்கே மூன்று, நான்கு குடும்பங்கள் மாத்திரமே உள்ளன. எதிர்காலத்தில் உவர் நிலத்தை, பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றும் போது, மக்கள் திரும்பி வருவதற்கு வாய்ப்பிருக்கிறது" என்றார்.

வலலிபுரம் இளையபிள்ளை (வயது 75) தெரிவிக்கும்போது, "1930ஆம் ஆண்டு இந்தக் கிராமத்தில் வந்து குடியேறினேன். அன்றிலிந்து இங்குதான் வசித்து வருகிறேன். வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே, இந்தக் குஞ்சுக்குளம் கிராமத்தில் மக்கள் வாழ்ந்திருந்தனர். நூற்றாண்டு பழைமை வாய்ந்த எமது கிராமம், இப்போது உவரால் அழிவடைந்துள்ளது. பாடசாலையும் பாழடைந்து உள்ளதுடன், இங்கு வாழ்ந்தவர்கள் எல்லோருமே, வேறு இடங்களுக்குச் சென்று விட்டார்கள்.

"1953ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னரே இந்தக் கிராமம் இருந்தது. நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இங்கு பரம்பரையாக வாழ்ந்தன. இங்கு தனியான ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. முன்பள்ளி, கூப்பன்கடை எல்லாமே இருந்தது. இப்போ எல்லாமே அழிந்து விட்டன.

இப்போது வயல் நிலங்கள், குடியிருப்புகள் யாவும் உவரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில், இங்கு வாழ்ந்தவர்கள் எல்லோருமே வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இப்போது நாங்கள் இரண்டு, மூன்று குடும்பங்கள் மாத்திரமே வாழ்கின்றோம்.

நாங்கள் குடிநீரை வன்னேரிகுளத்தில் போய் எடுத்து வருகின்றோம். எதிர்காலத்தில் உவர் நீரைக்கட்டுப்படுத்தி, நிலங்களைப் பாதுகாத்தால், ஓரளவு பயிர்கொடிகளை வைக்கமுடியும்" என்றார்.

செல்வநாயகம் அற்புதநாயகி (வயது 50) கூறும்போது தெரிவித்ததாவது: "குஞ்சுக்குளமே எங்கள் பிறப்பிடம். இங்கிருந்து எல்லோரும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டதால், நாங்களும் இப்போது திக்காய் கிராமத்தில் வசித்து வருகின்றோம். இங்கு 1,500 ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்செய்கை காணிகள், உவர் நிலங்களாக மாறியுள்ளன. இப்போது 600 வரையான நிலப்பில் பயிர்ச்செய்கை செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது. அவையும் நாளடைவில் உவராக மாறும் ஆபத்துக் காணப்படுகின்றது.

மண்டைக்கல்லாற்றால் வருகின்ற கடல்நீரைக் கட்டுப்படுத்தி, மழைநீரைக் தேக்குகின்ற திட்டம் ஒன்றை ஏற்படுத்துகின்ற போது, உவர் நிலங்கள் நல்ல நிலங்களாக மாறுவதற்கு வாய்ப்பிருப்பிருக்கிறது" என்றார்.

நூற்றாண்டுக்கு மேலாக மக்கள் வாழ்ந்த பழைமை வாய்ந்த ஒரு பகுதியாக இந்தக் குஞ்சுக்குளம் கிராமம் காணப்படுகின்றது. இப்பெரும் விவசாயக் கிராமத்தில் மக்கள் வாழ்ந்த சுமார் 10க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் காணப்பட்டன.

இதில் கூடுதலான கிராமங்கள், இப்போது ஆட்களற்ற பனம்கூடம் வெளிகளாகவே காணப்படுகின்றன. அதாவது, உப்புவில், குங்சுக்குளம், திக்காய், பறையன்குளம், குமுழமோட்டை, நாச்சான்குடா, சுரமனை, நத்தைப்பள்ளம், வண்ணார்அடம்பன், பிடாரிபள்ளம், குஞ்சானை விழுந்தான் போன்ற கிராமங்கள் ஆகும்.

குளத்தை அண்டிய குடியிருப்பாகவே ஆரம்பத்தில் உருவாகியிருந்தாலும், படிப்படியாக குக்கிராமங்களுக்குள் மக்கள் பரந்து வாழ்ந்திருக்கின்றனர். குளத்தின் அருகில் மிகவும் பழைமை வாய்ந்த பிள்ளையார் கோவிர் ஒன்றும் அதை அண்மித்த பகுதியில் மிகப்பழைய கிணறு ஒன்றும் காணப்படுகின்றன.

இங்கு வாழ்ந்த மக்கள், ஆரம்பத்தில் கிணற்றிலேயே தமக்கான குடிநீரை பெற்று வந்ததாகவும் இந்தக் கிணற்றை அண்டியே குஞ்சுக்குளம் கணேச வித்தியாலயம் என்ற பாடசாலை காணப்பட்டதாகவும் அதன் பின்னரே மக்கள் செறிவாக வாழ்ந்த பகுதியில் காணி வழங்கப்பட்டு தரம்-5 வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக இயங்கியதாகவும் இதற்கு அருகில் கலைவாணி முன்பள்ளி சிறுவர் பாடசாலை இயங்கியதாகவும் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

பூநகரியின் எல்லையோரமாக மண்டைக்கல்லாறை அண்மித்த பகுதியாகவும் இந்தப் பிரதேசம் காணப்படுவதால், கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால், இந்த உவர் நீர்த்தடுப்பணைகள் யாவும் முழுமையாகவே சேதமடைந்து, உவர் நீர் உட்புகும் கிராமமாக மாறி, இன்று நிலங்கள் உவரால் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த உவர் நீரைக் கட்டுப்படுத்தி, சிறிய சிறிய நன்னீர் நிலங்களை உருவாக்கும் போது, உவர் நீராக மாறியுள்ள குடிநீர் கிணறுகள், நன்னீராக மாறவும் உவர் நிலங்கள் நாளடைவில் பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றுவதற்கும் வாய்ப்பிருப்பதாக இந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, மாவட்டத்தின் வாழும் மக்கள் தொகையில் அதிகளவான மக்கள், விவசாயத்தை வாழ்வாதாரத்தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். மாவட்டத்தில் இருக்கின்ற அநேகமான பயிர்ச்செய்கை நிலங்கள், யுத்தத்தால் உவர் நிலங்களாக மாறியிருக்கின்றன. அதாவது, பூநகரி பிரதேசத்திலும் பல்லவராயன்கட்டு கிராமம் உவரிால் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி, ஆனையிவு, தட்டுவன்கொட்டி, கண்டாவளை, புளியம்பொக்கணை, வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளுக்கான உவர் நீர்த்தடுப்பணைகள் யுத்தத்தின்போது சேதமாக்கப்பட்டு, புனரமைக்கப்படாததால் கடல் நீரால் பயர்ச்செய்கை நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 5,000 ஏக்கருக்கும் மேற்பட்ட பயர்ச்செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியிருப்பதாக மாவட்ட விவசாய திணைக்களத்தின் தகவல்கள் ஊடாக அறியமுடிகின்றது.

இப்போது, உவர் நீர் தடுப்பணைகள் அமைக்கப்பட்டு வருகின்றபோதும், குறிப்பிட்ட சிலபகுதிகளில் நன்னீர் நிலைகளை ஏற்படுத்த வேண்டிய தேவையிருப்பதாக விவசாயிகள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

எனவே, எதிர்காலத்தில் உவர் நிலங்களை நன்நிலங்களாக மாற்றுவதற்கும் உவர் நீர்த்தடுப்பணைகளை அமைப்பதற்கும் உரிய திட்டங்களை தயாரித்து அழிவடையும் கிராமங்களை பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

சின்னத்தொடுவாய் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்:

அபகரிக்கப்படும் ஆலய காணிகள்

மன்னர் காலத்து வரலாற்று கொண்ட கோவிலின் இன்றைய அவலம்

அ. அச்சுதன்

திருக்கடலூர், கேணியடி சின்னத் தொடுவாய் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் திருகோணமலைப் பட்டிணத்தில் ரயில் நிலையத்திற்குச் சமீபமாக இருக்கின்றது. பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தோடு இக் கோவில் வரலாறு சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. திருக்கோணசல புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

'அநுராதபுரத்திலிருந்து அரசாண்ட கஜபாகு மன்னன் திருக்கோணஸ்வரத்தை இடித்து அழிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு அநுராதப்புரத்திலிருந்து படையுடன் வந்தானாம். வரும் வழியில் இரண்டு கண்களும் பார்வை இழந்துவிட்டன. தனது அகங்காரத்தால்தான் இப்படி நேர்ந்ததென்று உணர்ந்தான்.

இப்போது கந்தளாய் என்று கூறப்படும் இடத்தில், அந்தணன் ஒருவர் எதிர்ப்பட்டு விபூதி கொடுத்து ஆசீர்வதிக்க ஒரு கண் பார்வை பெற்றதாம். கண் தளைத்த இடமாதலால் அந்த இடம் இன்றும் 'கந்தளாய்' என்று அழைக்கப்படுகிறது, பெயரிடப்படுகின்றது.

தனது அகங்காரத்திற்குப் பரிகாரம் தேடும் ஆவலோடு கஜபாகு மன்னன் திருக்கோணேஸ்வரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தானாம். திருக்கோணேஸ்வரத்திற்குச் சமீபமாக வரும்போது கோணேசர் அருளால் மற்றக்கண்ணும் பார்வை பெற்றதாம். பார்வை பெற்ற இடம் இந்த 'சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவில்' இருக்கின்ற இடத்தில் என திருக்கோணாசல வைபவமாலையும் குறிப்பிகின்றது.

சின்னத்தொடுவாய் அருவி சங்கமமாகும் இடத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டதால் இதற்குச் சின்னத்தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் என்று பெயர்சூட்டப்பட்டது என அறியமுடிகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் தெட்சணகையிலாயம் எனப்படும் திருக்கோணேஸ்வரம்தான் பெரிய கோவில். ஆதலால் கோணமாமலையிலுள்ள ஏனைய கோவில்கள் அக்காலத்தில் சிறியனவாகவே கட்டப்பட்டிருந்தன. இக்கோவிலும் கல்லால் கட்டப்பட்ட சிறிய கோவில்தான். கோவில் வாசலில் நின்றபடியே கோணமாமலையமர்ந்த கோணேசப் பெருமானையும் தரிசிக்கலாம். இடையில் கடல்தான் பிரித்து நிற்கின்றது. இக் கோவிலுக்கு அருகில் நீண்ட வரலாற்றையுடைய கேணியும் காணப்படுகின்றது.

அக்காலத்தில் சாம்பல்தீவு, நிலாவெளி முதலிய கிராமங்களிலிருந்து வருபவர்கள் இக்கோவிலின் அருகில் தாம் கொண்டு வந்த வியாபாரப் பொதிகளை இறக்கி வைத்து, கோவில் கேணியில் நீர் பருகி இளைப்பாறிச் செல்வார்களாம்.

பண்டைக்காலத்தில் சிறியதாயிருந்த இக்கோவில் பின்னர் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தெரிசன மண்டபங்களைக் கொண்ட அழகான கோவிலாகக் காணப்பட்டது. 1981இல் பாலஸ்தாபனம் செய்து கும்பாபிஷேகம் நடைபெற்று இருக்கின்றது.

கருவறையில் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. மகாமண்டபத்தில் மூஷிகம், பலிபீடம் உண்டு. காலைச்சந்தி, மாலைச்சந்தி ஆகிய இரண்டுகாலப் பூசைகளும், ஆனி உத்தரத்தைத் தீர்த்த தினமாகக் கொண்டு முதற் பத்து நாள்களும் அலங்கார உற்சவம் கூட நடைபெற்று வந்து இருக்கின்றது. குறிப்பாக பிள்ளையார் கதை, திருவெம்பாவை, சித்திராபூரணை போன்ற நாள்களில் விசேட பூசைகள் கூட சிறப்பாக நடைபெற்று இருக்கின்றன. ஆனால், இன்று பூசைகள் நடைபெற்றாலும் அன்று போல் இன்று இல்லை.

இந்த நிலையில், கடந்த சில ஆண்டுகளாக இக்கோவிலின் சூழல் மாற்றமடைந்திருக்கின்றது. கோணேஸ்வரம் கோவிலுடன் தொடர்புடைய வரலாற்றைக் கொண்ட இக்கோவிலின் இன்றைய நிலை மிகவும் கவலையை தருகின்றது. அழிவினை நோக்கி இவ்வாலயம் சென்று கொண்டிருக்கின்றது.

கோவிலுக்குச் சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அக்காணிகளில் அனுமதி அற்ற மக்கள் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் கோவிலின் மகிமைகள், சிறப்புகள் சிதைக்கப்பட்டுள்ளன.

சுவாமி தீர்த்தமாடும் கேணிக்கு அருகில் காணப்படும் புறச்சூழல், கோவிலின் புனித தன்மையை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. புனிதமான இக்கேணி இன்று அழிவடைந்து வருகின்றது. கவனிப்பார் அற்று காணப்படுகின்றது.

கோவில் சூழல், கோவிலின் பழைமையையும் அதன் வரலாற்றுப் பெருமையையும் இருப்பையும் இன்று சிதைத்து வருகின்றது. ஆகவே இக்கோவிலைப் பாதுகாக்க வேண்டியது, திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் கடமையாகும்.

கோவிலுக்குச் சொந்தமான காணிகள், மீண்டும் கோவிலுக்கு வழங்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை இந்து சமய அமைப்புகள் முன்நின்று மேற்கொள்ளவேண்டும். கோவில் சூழல் புனிதப்படுத்தப்பட வேண்டும். அதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச அதிகாரிகளும் முன்வரவேண்டும். விலை மதிக்க முடியாத வரலாற்று அடையாளங்கள், பூர்வீக வரலாறுகள், கோவில்கள் பாதுகாப்பட வேண்டும் என்பது அபிலாஷையாகும்.

“யாழ்ப்பாணக் கல்லூரியில் ‘கைவைக்க’ எத்தனிக்கும்

கயவர் கூட்டம்”

பழைய மாணவர்கள், இன்றைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆவேசம்!

பஸ்தியாம்பிள்ளை ஜோண்சன்
யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் – கொழும்பு

பொதுவாக, இலங்கையின் இன்றைய நெருக்கடியானதும் துன்பகரமானதுமான நிலைமைகளை எடுத்துக்கொண்டால், அதற்குக் காரணமானவர்கள் ராஜபக்ஷர்கள் என்பதை எந்தக் குழந்தையும் சுட்டுவிரலைச் சுட்டும். குறிப்பாக, ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுமாறு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டங்கள், உலகம் பூராவும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. போராட்டங்களும் அழுத்தங்களும் அவமதிப்புகளும் கூட, ஜனாதிபதி கோட்டாபயவை ஒன்றும் செய்துவிடவில்லை. அவர், தனது பதவியைக் கட்டிப்பிடித்தபடியே, ‘உணர்வுகள் அற்ற ஜடம்போல்’ இப்பொழுதும் இருக்கின்றார்.

ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் போன்ற கொள்கைகளைக் கடைப்பிக்கும் நாடுகளில், பெரும் உயிரழிவுகளை ஏற்படுத்தும் பேரழிவுககள், விபரீதங்கள், விபத்துகள் ஏற்பட்டுவிட்டால், அந்தத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரோ, நாட்டின் தலைவரோ அந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று, உடனடியாகப் பதவியில் இருந்து இறங்கிவிடுவார். இத்தகைய உயர் தலைமைத்துவப் பண்பு, அந்நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் சிறந்த அரசியல் நாகரிகத்தின் வழிவந்த ஜனநாயகப் பண்பாகும். பதவி என்பதற்கு அப்பால், பொறுப்புக்கூறல் என்பதை நன்மதிப்பும் பெறுமதியும் மிக்கதாக மதிக்கப்படுகின்றது.

ஆனால், இலங்கையில் இத்தகைய அரசியல் நாகரிகம் பின்பற்றப்படுவது கிடையாது; அல்லது தெரியாது.

நாட்டைச் சூறையாடுவதற்காகவே தலைவர்களான இத்தகையவர்களின் நடத்தைககளால்த்தான், பிச்சைக்காரர்களிடம் கையேந்தும் இழிநிலையில் இந்தநாடு வந்துநிற்கின்றது. தலைவர்களின் ‘ரவுடி’த் தனமான போக்குகளை, இன்னும் விளங்கிக் கொள்ளாமல் அல்லது, அவர்கள் சொல்வதை ‘தேவவாக்காக’ நம்பிக்கொண்டிருக்கும் அப்பாவித்தனமான மக்கள் கூட்டம், இன்னும் இலங்கையில் வாழ்ந்துகொண்டே இருக்கின்றது என்பது, எமது நாட்டின் சாபக்கேடாகவேதான் இருக்கமுடியும்.

தலைமைத்துவம் ஒன்றின் அடிநாதமாக, ‘பொறுப்புக்கூறல்’ பண்பு இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால்த்தான், அது சரியானதும் முன்னேற்றகரமானதுமான பாதையில் வழிநடத்தும் தலைமைத்துவமாக இருக்கமுடியும்.

தலைமை தவறான வழியில் பயணிக்குமாயின் ‘மக்கள்’, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி, தடுத்து நிறுத்தி, சரியான பாதையில் பயணிக்கவைக்கும் ஆயுதமாகவே, அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

‘கோட்டாவே வீட்டுக்குப் போ’ போராட்டத்தின் வீரியம்மிக்க ‘வீச்சு’, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கழற்றிக் கொண்டுசென்றுவிட்டது. வெற்றிக்கான இலக்குகளை நோக்கிய நகர்வுகளை, வீரியம் மிக்க போராட்டங்கள் உருவாக்குகின்றன. வீரியம் மிக்க போராட்டங்களை, தர்மத்தின் திசைவழி நிற்கும் நோக்கங்கள் உருவாக்குகின்றன. நிற்க!

‘நாட்டைப் பாதுகாப்போம்’ என்பதைப் போலவே, ‘வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாதுகாப்போம்’ என்ற நோக்கம் கொண்ட போராட்டம் ஒன்று, சனிக்கிழமை (03) வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக நடைபெற்றிருந்தது. ‘யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாதுகாப்போம்’ என்ற தொனிபொருளில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், வட்டுக்கோட்டை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள், ‘Do not Distroy Jaffna College’, ‘Bishop Thiagarajah Go home’, ‘ஆசிரியர்களின் வயிற்றில் அடிக்காதே’, ‘Renovate the Building’, ‘பாடசாலை நிதி உங்கள் உல்லாச வாழ்க்கைக்கா?’, ‘கல்லூரிச் சொத்து உறுதிகள் எங்கே?’, ‘வெளிப்படைத் தன்மை வேண்டும்’, ‘Uphold the Constituttion of the JC Board’, ‘Bishop, Sumanthiran No deal’, போன்ற பதாகைகளை ஏந்தியிருந்தார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையில் இடம்பெறும் மற்றும், சபையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மைமிக்கவையாக இருக்கவேண்டும் என்றும் கல்லூரியின் நிர்வாகத்துக்குள் கல்லூரிக்குப் பாதகமான வகையில் ஆளுநர் சபையின் தலைவர் மூக்கை நுழைப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அமெரிக்காவிலுள்ள நிதிகளின் தர்ம கர்த்தா சபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, விலக்கிக் கொள்ளவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே, குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.



இலங்கையின் ஆட்சிபீடத்தில் இருக்கும் ‘தலைமை’களிடத்தில் எத்தகைய கீழ்த்தரமான மனோபாவம் காணப்படுகின்றதோ, அத்தகைய மனோபாவத்தின் போக்கே, யாழ்ப்பாணக் கல்லூரியின் தற்போதைய ஆளுநர் சபையிடமும் காணப்படுகின்றது என்பதை, ஆர்ப்பாட்டத்தில் ஏந்தியிருந்த பதாகைகளின் வாசகங்கள் படம்பிடித்துக் காட்டியிருந்தன. வரலாறு படைக்கக்கூடிய உயர்பதவிக்கு வருவோர், அந்தப் பதவியின் அதிகாரம், புனிதம் போன்றவற்றை, வியாபார நோக்கம் கொண்ட மனப்பான்மையுடன் பார்ப்பதும் அணுகுவதும், சீரழிவுகளையே விளைவிக்கும். நாட்டின் இன்றைய வங்குரோத்துநிலை, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்துவிடக்கூடாது என்பதால், இந்தப் போராட்டத்தின்பால் இருக்கும் நியாயங்களை மறுத்துவிடமுடியாது.

யாழ்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபை

யாழ்ப்பாணக் கல்லூரியின் நலன்களைப் பேணுவதும் கல்லூரியை முன்னோக்கி நகர்த்துவதும் என யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் பொறுப்புகளை மிகஎளிய வடிவில் விளங்கிக்கொள்ளலாம். இந்தச் சபைக்கு 11 - 14 வரையான உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். 1894ஆம் ஆண்டு, இந்தஆளுநர் சபையின் யாப்புவிதிகள் உருவாக்கப்பட்டதாக கல்லூரியின் வரலாற்று ஆவணங்களில் காணமுடிகின்றது. கல்லூரியின் முன்னேற்றம் கருதி, காலமாற்றங்களுக்கு ஏற்ப, யாப்புவிதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதியாக, 2015ஆம் ஆண்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த யாப்புவிதி மாற்றம்தான், யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பாதகமான, மோசடித்தனமான காய்நகர்த்தல்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கின்றது. அவ்வாறு, கேள்விகளுக்கு அப்பாற்பட்ட அதிகாரங்களை, ஓரிடத்தில் குவித்துவைத்திருக்கும் வகையில், புதிய யாப்பு விதிகள் மாற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையின் உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பது முக்கிய விடயமாகும். 2015ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட யாப்புவிதியின் பிரகாரம், தென்னிந்திய திருச்சபையின் பேராயர், யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவராக இருப்பார் என்று மாற்றப்பட்டுள்ளது.

கல்லூரியின் ஆளுநர் சபை உறுப்பினராக, தென்இந்திய திருச்சபையின் பேராயர் இருப்பார் என்பது, 1947ஆம் ஆண்டு யாப்புவிதிகளின் பிரகாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், 2015ஆம் ஆண்டு யாப்புவிதியில் தென்இந்திய திருச்சபையின் பேராயர், நேரடியாகவே கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவராக, அவருடை பதவிக்காலம் வரை இருப்பார் என மாற்றப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கு முன்னுள்ள யாப்புவிதியின் பிரகாரம், ஆளுநர் சபையின் தலைவர், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவராக இருந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் 11 - 14 பேரடங்கியஆளுநர் சபை உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுவர். தென்இந்திய திருச்சபையின் பேராயர் (தலைவர்), கல்லூரி அதிபர், தென்இந்திய திருச்சபையின் ஆறு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் (கொழும்பு பழைய மாணவர் சங்கத்தை சேர்ந்த ரி. எதிராஜ் தற்போது பிரசன்னப்படுத்துகின்றார்), ஆசிரியர்களுக்கான பிரதிநிதி (இவர் ஆசிரியர் அல்லாதவராக இருத்தல் வேண்டும்), ஏற்கெனவே தெரிவான உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து, மீதமுள்ள உறுப்பினர்களை தெரிவுசெய்வார்கள்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் கருத்துப்படி, “இப்போதுள்ள ஆளுநர் சபை உறுப்பினர்களில், பழைய மாணவர் சங்க பிரதிநிதியைத் தவிர, ஏனையோர் பேராயரால் பிரத்தியேகமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களாகவோ அழைத்து வரப்பட்டவர்களாகவோதான் இருக்கின்றார்கள். இவர்கள், பேராயரின் போக்கு, முடிவுகள் போன்றவற்றுக்கு மாறாக, செயற்படத் துணியமாட்டார்கள். அவருக்குக் கட்டுப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள்” என்கின்றார்கள்.

போராடியவர்கள் ஒவ்வொருவரின் முகங்களிலும், ‘மோசமான யாப்புவிதி மீறல்கள் ஊடாக, கல்லூரி சீரழிக்கப்படுகின்றது. இதற்கு இப்போதுள்ளஆளுநர் சபைதான் பொறுப்புக்கூற வேண்டியது’ என்ற ஆக்ரோசமும் ஆதங்கமும் தெளிவாகப் பிரதிபலித்தன.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையின் நிர்வாகக் குழு

யாப்பு விதிகளின் பிரகாரம் காணப்படும் இந்தக் குழு, கல்லூரிக்கான பட்ஜெட்டையும் ஆண்டு கணக்கறிக்கையையும் தயாரித்து, ஆளுநர் சபையின் அங்கிகாரத்தைப் பெற்று, தர்மகர்த்தா சபைக்கு அனுப்ப வேண்டும். இந்தக் குழுவில் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரும் அங்கத்தவராக இருப்பார். இங்குள்ள சோகம் என்னவென்றால், இந்தக் குழு கடந்த எட்டுஆண்டுகளாகக் கூடவில்லை. கடந்த எட்டுஆண்டு கால பட்ஜெட்டும் கணக்கறிக்கையும், இந்த நிர்வாகக்குழுவால் முறைப்படி யாப்புவிதிகளின் பிரகாரம் கூடி, தயாரிக்கப்படாதவையாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் நிதிகளின் தர்மகர்த்தா சபை

1877ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தச் சபை, அமெரிக்காவில் உள்ளது. மாணவர்களிடம் இருந்து பெறப்படும் ஆண்டுக் கட்டண நிதி தவிர, மேலதிகமாகத் தேவைப்படும் நிதியை, இந்த நிதிகளின் தர்மகர்த்தா சபைதான், வழங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தில் இருந்து, இலவச பாடப்புத்தகம், இலவச சீருடை என்பவற்றைத் தவிர வேறு எதையும் யாழ்ப்பாணக் கல்லூரி பெற்றுக்கொள்வதில்லை.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையால் 2016ஆம் ஆண்டு, ‘யாழ்ப்பாணக் கல்லூரியின் சுயநிர்ணயஉரிமை’ என்ற பெயரில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகத்தின் ஆரம்பப் பகுதியில், இலங்கை கொலனித்துவ நாடாக இருக்கும்போது, அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் திரட்டிய நிதியைக் கொண்டு அமைக்கப்பட்டதே ‘நிதிகளின் தர்மகர்த்தா சபை’ என்றும் இப்பொழுது, இலங்கை முழுமையாக சுதந்திரம் பெற்று, சுயாட்சி, சுதந்திரம், இறைமை ஆகியவற்றுடன் எங்களை நாங்களே ஆண்டு கொண்டிருக்கின்றோம் என்பதை நியாயப்படுத்தி, உறுதிப்படுத்தும் வகையிலும், இறுதிப் பகுதியில் சில கோரிக்கைகளை முன்வைத்தும் உருவாக்கப்பட்டு இருந்தது.

அக்கோரிக்கைகளில் முக்கியமாக, அமெரிக்காவில் தர்மகர்த்தா சபையிடம் தற்போது இருக்கும் 40 மில்லியன் பணத்தில், ஒன்பதில் எட்டு வீதத்தை இலங்கையில், இலங்கையர்களைக் கொண்ட தர்மகர்த்தா சபையை உருவாக்கி, அதன்கீழ் கொண்டுவரவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தப் புத்தகம், அமெரிக்காவிலுள்ள நிதிகளின் தர்மகர்த்தா சபையின் பார்வைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

நிதிகளின் தர்மகர்த்தா சபை, 2017ஆம் ஆண்டு ஜனவரியில் கடிதமொன்றை ஆளுநர் சபைக்கு அனுப்பியிருந்தது. அக்கடிதத்தில், பொறுப்புக்கூறல், உள்ளக ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையிலான சிறந்த நிர்வாக முகாமைத்துவத்தை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டு, கட்டாயம் அமல்படுத்தப்பட வேண்டிய எட்டு சீர்திருத்தங்களையும் முன்வைத்திருந்தது. அவ்வாறு அமல்படுத்தத் தவறின் படிப்படியாக நிதி குறைப்பு செய்யப்படும் என்றும் எச்சரித்திருந்தது.

2017 ஜனவரி முதல் 2018 ஜூலை வரையுள்ள ஆறு காலாண்டு காலப்பகுதியில் கணிசமான நிதி குறைப்பு செய்யப்பட்ட நிலையில், 2018 ஜூலையில் நிதிகளின் தர்மகர்த்தா சபை, ஆளுநர் சபைக்கு மீண்டுமொரு கடிதத்தை அனுப்பியிருந்தது. அக்கடிதத்தில், தலைவரும் உபதலைவரும் ஆளுநர் சபையில் இருந்து விலகவேண்டும் என்றும் இவர்கள் விலகாவிட்டால், 100 சதவீதம் நிதியளிப்பதை நிறுத்திவிடுவோம் என்றுஅறிவித்திருந்தது.

இதையடுத்து, ஆளுநர் சபை, நிதிகளின் தர்மகர்த்தா சபைக்கு எதிராக, பாடசாலைக்கு கிரமமாக நிதி அளிக்கப்படவில்லை என்றும் தர்மகர்த்தா சபையின் தற்போதைய உறுப்பினர்கள் அகற்றப்பட்டு, புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் கோரி வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கு இன்றுவரை தீர்ப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

‘உதவி செய்யப்போய் உபத்திரவங்களைத் தேடிக்கொள்வானேன்’ என்ற நிலைப்பாட்டுக்கு வந்த நிதிகளின் தர்மகர்த்தா சபை, யாழ்ப்பாணக் கல்லூரியுடனான உறவைத் துண்டித்து விட்டு, தர்மகர்த்தா சபையின் யாப்பில் குறிப்பிட்டவாறு சபையை கலைக்கும் போதான நடைமுறையைப் பின்பற்றுவதற்கும் ஆலோசித்து வருவதாக அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்பிக்கப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியை 2023ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 23ஆம் திகதி கொண்டாடவுள்ள ஒரு பழம்பெரும் கல்வி நிறுவனமாகத் திகழும் ‘யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாதுகாப்போம்’ என்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மூலம், ஆளுநர் சபைக்குள் இடம்பெறும் கல்லூரிக்குப் பாதகமான காய்நகர்த்தல்கள் பொதுவெளியில் வெட்டவெளிச்சமாகி உள்ளன.

‘கல்லூரியைப் பாதுகாப்போம்’ என்ற உணர்வு, உலகம் பூராவும் வாழும் பழைய மாணவர்களின் உள்ளங்களில் பொங்கி எழவேண்டும். கல்லூரி மீதான கரிசனை காரியசித்தி பெற வேண்டும். அடம்பன் கொடிகளாக ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் பழைய மாணவர்கள், ஒன்றுதிரண்டு, மிடுக்காக எழவேண்டும்.

‘ஆடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்பது முதுமொழி. ஒன்று திரட்டிய அடம்பன் கொடியால், சும்மாஅம்மியைப் போட்டுஅடித்துக் கொண்டிருந்தால் அம்மி நகரப்போவதில்லை. நென்புகோல், உறுளை போன்ற உபகரணங்களையும் பயன்படுத்தி, அடம்பன் கொடியால் சுற்றி, இழுத்து அகற்றினால், அம்மி நகராமல் விடப்போவதில்லை.

‘குரே குரெ...’ என எழுச்சியுடன் கல்லூரி கீதம் இசைக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி மைந்தர்கள், அந்த நாதம் பேரெழுச்சியுடன் விண் மேலெழுந்து, கல்லூரியின் புனித ஆன்மாவின் மீது படந்திருக்கும் கரும்துகள்களைத் துடைத்து, புனிதமும் பூரணத்துவமும் அடையச் செய்யவேண்டும்.

(இக்கட்டுரைக்குத் தேவையான உசாத்துணை தகவல்களை, யாழ்ப்பாணக் கல்லூரியின் வட்டுக்கோட்டை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எம். திருவரங்கன் வழங்கி, உதவியிருந்தார்)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 18 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.